# ஆய்த எழுத்து

பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

# AYIDHA EZHUTHU

AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES - ISSN : 2278 - 7550

செப்டம்பர் – 2020



visit us: www.pallavipathippakam.in

https://ayidhaezhuthu.in

பல்லவி பதிப்பகம்

ISSN : 2278-7550

2278-7550

# ஆய்த எழுத்து

பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

# AYIDHA EZHUTHU

## INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES

**ISSN : 2278-7550**

UGC - பல்கலைக் கழக மானியக் குழுவின் அங்கீகாரம் பெற்றது

**UGC RECOGNISED JOURNAL**

UGC NO : 42330 / IMPACT FACTOR : 4.118

மலர் : 8 செப்டம்பர் - 2020 இதழ் : 9

**பதிப்பாசிரியர்**

**நல் நடராசன்**

தமிழியல் ஆய்வு மையம், ஈரோடு.

0424-2251545, 94422 51549

97919 51549, 63817 01339

**பல்லவி பதிப்பகம்**

118, மேட்டூர் சாலை,

கல்யாண் சில்க்ஸ் எதிரில்,

ஈரோடு - 638011.

pallavipublications@gmail.com

ayidhaezhuthu@gmail.com



**EDITORIAL BOARD**

**Dr.C.Thiyagarajan**
*Tamil University, Thanjavur.*
mcthiyagu@gmail.com

**Dr.K.Ramesh**
*Thiruvalluvar University, Vellore.*
grameshtu@gmail.com

**Dr.B.Sathiyamoorthy**
*Madurai Kamaraj University, Madurai.*
tamilkanikani@gmail.com

**Dr.P.Jayakrishnan**
*Kerala University, Thiruvanandapuram.*
pjktamil@gmail.com

**Dr.K.Sankaranarayanan**
*Chennai University, Chennai.*
krksankaraatamil@gmail.com

**Dr.Alibhava**
*Bharathidasan University, Trichy.*
alibavapkm@gmail.com

**Dr.S.Aranganathan**
*Tamil Nadu Open University, Chennai.*
arangantnou@gmail.com

**Dr.S.Kavitha**
*Tamil University, Thanjavur.*
skavithatamil@gmail.com

**ஆசிரியர் குழு**

**முனைவர் சி.தியாகராசன்**
*தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*
mcthiyagu@gmail.com

**முனைவர் க.இரமேஷ்**
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர்.*
grameshtu@gmail.com

**முனைவர் போ.சத்தியமூர்த்தி**
*மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.*
tamilkanikani@gmail.com

**முனைவர் ப.ஜெயகிருஷ்ணன்**
*கேரளா பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்.*
pjktamil@gmail.com

**முனைவர் கி.சங்கரநாராயணன்**
*சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.*
krksankaraatamil@gmail.com

**முனைவர் உ.அலிபாவா**
*பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி.*
alibavapkm@gmail.com

**முனைவர் சு.அரங்கநாதன்**
*தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்,,சென்னை.*
arangantnou@gmail.com

**முனைவர் ச.கவிதா**
*தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*
skavithatamil@gmail.com

**Dr.Manonmanidevi Annamalai**
*Sulthan Itrecue Kalviyal University, Malaysia.*

**Dr.Paramasivam Muthuswamy**
*Malasyia University, Malasyia.*
mparam98@gmail.com

**Dr.S.Kavitha**
*Tamil University, Thanjavoor.*
skavithatamil@gmail.com

**Dr.Manonmanidevi Annamalai**
*Sulthan Itrecue Kalviyal University, Malaysia.*

**Dr.Paramasivam Muthuswamy**
*Malasyia University, Malasyia.*
mparam98@gmail.com

**R.F.Arooz**
*Raapa International Campus, Director, Sri Lanka.*
raapa.arooz@gmail.com

**ADVISORY BOARD**

**M.Senthilkumar**
*Periyar University, Salem.*
senthiltamilnesan@gamil.com

**Dr.V.S.Sreenivasan**
*Nandha Arts and Science College, Erode.*
srivc2345@gmail.com

**Dr.T.K.Anuradha**
*Treenedi Girls College, Namakkal.*
anuradha.pugal@gmail.com

**Dr.P.Senthilkumar**
*Periyar University Constituent Arts and Science College, Dharmapuri.*
Senthakil06@gmail.com

**Dr.R.Vijyarani**
*Beshap Heeper College, Tirucherappalli.*
vejheya.rani@gmail.com

**Dr.R.Nirmala Devi**
*Vellalar Womens College, Erode.*
prnirmaladevi@gmail.com

**முனைவர் மனோன்மணிதேவி அண்ணாமலை**
*சுல்தான் இட்ரீசு கல்வியியல் பல்கலைக்கழகம், மலேசியா.*

**முனைவர் பரமசிவம் முத்துசாமி**
*மலேசியா பல்கலைக்கழகம், மலேசியா.*
mparam98@gmail.com

**முனைவர் ச.கவிதா**
*தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*
skavithatamil@gmail.com

**முனைவர் மனோன்மணிதேவி அண்ணாமலை**
*சுல்தான் இட்ரீசு கல்வியியல் பல்கலைக்கழகம், மலேசியா.*

**முனைவர் பரமசிவம் முத்துசாமி**
*மலேசியா பல்கலைக்கழகம், மலேசியா.*
mparam98@gmail.com

**R.F.அரூஸ்**
*ராபா பண்ணாட்டு வளாகம்,*
இயக்குனர், *இலங்கை.*
raapa.arooz@gmail.com

**ஆலோசனை குழு**

**ம.செந்தில்குமரர்**
*பெரியார் கல்கலைக்கழகம், சேலம்.*
senthiltamilnesan@gamil.com

**முனைவர் வெ.ச.சீனிவாசன்**
*நந்தா கலை அறிவியல் கல்லூரி, ஈரோடு.*
srivc2345@gmail.com

**முனைவர் தா.க.அனுராதா**
*டிரினிடி மகளிர் கல்லூரி, நாமக்கல்.*
anuradha.pugal@gmail.com

**முனைவர் பொ.செந்தில்குமரர்**
*பெரியார் பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தருமபுரி.*
Senthakil06@gmail.com

**முனைவர் இரா.விஜயராணி**
*பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.*
vejheya.rani@gmail.com

**முனைவர் நிர்மலா தேவி**
*வேளாளர் மகளிர் கல்லூரி, ஈரோடு.*
prnirmaladevi@gmail.com

# படைப்புகள் வரவேற்கப்படுகின்றன...!

**ஆய்த எழுத்து** - தமிழியல் ஆய்வுக்கான ஒரு புதியகளம். இவ்விதழ் 2013 ஆம் ஆண்டு முதல் காலாண்டு இதழாக வெளிவந்தது. 2018 இல் இருந்து மாத இதழாக வெளிவருகிறது. பேராசிரியர்கள், அறிஞர்கள், ஆய்வாளர்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்கள் அனைவரும் கட்டுரை எழுதலாம். சங்க இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரையிலான இலக்கிய ஆய்வுகள், நாட்டுப்புறவியல் இலக்கணம், மொழியியல் ஆய்வுகள் மற்றும் தமிழோடு தொடர்புடைய பிற துறைகள் அனைத்தும் பொருளாகலாம்.

கட்டுரைகளில் கூறப்படும் கருத்துகளுக்கு அக்கட்டுரை ஆசிரியரே பொறுப்பாவார். கட்டுரையாளர்களின் கருத்து இதழ் ஆசிரியர் குழுவின் கருத்தினை பிரதிபலிப்பன அல்ல. படைப்புகளைச் சுருக்கவும், திருத்தவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு. கட்டுரைகள் ஆய்வுத் தரமுடையவைகளாக அமைதல் வேண்டும். ஆய்வுப் பொருளுக்கு முரண்பட்டதாக அமையும் கட்டுரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. படைப்புகளைத் திருப்பி அனுப்ப இயலாது. இவ்விதழுக்கு கட்டுரை அனுப்ப விரும்புவோர் கீழ்க்காணும் வழிமுறைகளைப் பின்பற்றலாம்.

1. **பொருள்** : சங்க இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரையிலான இலக்கிய ஆய்வுகள், நாட்டுப்புறவியல், இலக்கணம், மொழியியல் ஆய்வுகள் மற்றும் தமிழோடு தொடர்புடைய அனைத்தும் இதன் பொருளாகலாம்.

2. **அளவு** : MSWord இல் A4 அளவில், 1.5 வாக்கிய இடைவெளியில் (Lining Space), பாமினி (Bamini Font) - 12 புள்ளி எழுத்தளவில், மூன்று முதல் ஐந்து பக்கங்களுக்குள் கட்டுரை அமைய வேண்டும்.

3. **முகவரி** : கட்டுரைத் தலைப்பின் கீழ் ஆசிரியர் பெயர், பதவி, முகவரியும், கட்டுரைமுடிவின் கீழ் இதழ் அனுப்ப வேண்டிய முகவரி, மின்னஞ்சல் முகவரி மற்றும் அலைபேசி எண்களும் இடம்பெறவேண்டும்.

4. **கட்டுரை அனுப்பும் முறை** : கட்டுரையை ayidhaezhuthu@gmail.com (Or) pallavipublications@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம்.

5. **சந்தா** : தனி இதழ் விலை ரூ.350/- இதழைத் தொடர்ந்து பெற விரும்புவோர் உறுப்பினர் கட்டணம் செலுத்தலாம். ஒரு ஆண்டிற்கு 12 இதழ்கள் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1 ஆண்டுக்கட்டணம் (தனி நபர்) | - | ரூ. 3000/- |
| 1 ஆண்டுக்கட்டணம் (நூலகம், கல்வி நிறுவனங்கள்) | - | ரூ. 3600/- |

6. **கட்டணம் செலுத்தும் முறை** : உறுப்பினர் (சந்தா) கட்டணத்தை **PALLAVI PATHIPPAKAM** என்ற பெயரில் வரைவோலையாக (**DD**) ஈரோட்டில் மாற்றிக் கொள்ளத்தக்க வகையில் (**PAYABLE AT ERODE**) அனுப்பலாம். இணையவழி, (**NET BANKING**), அலைபேசி (**MOBILE BANKING**) வங்கி பரிவர்த்தனை உடையவர்கள் **NEFT** முறையிலும் பணம் செலுத்தலாம்.

**A/C Name: PALLAVI PATHIPPAKAM.**
**A/C Type : CA,**
**A/C No : 33679969977.**
**Bank : STATE BANK OF INDIA,**
**Sathy Road, Erode -638 011.**
**IFSC : SBIN0016100.**

**பல்லவி பதிப்பகம்**
118, மேட்டூர் சாலை, கல்யாண் சில்க்ஸ் எதிரில்,
ஈரோடு - 638011.

0424-2251545, 94422 51549
97919 51549, 63817 01339

**pallavipublications@gmail.com**
**ayidhaezhuthu@gmail.com**




**படைப்பாளர்களின் கவனத்திற்கு ....**

இதுவரை வெளியான, அனைத்து ஆய்த எழுத்து இதழ்களையும் எங்களது **www.pallavipathippakam.in** இணையத்தளத்தில், இதழ்கள் - ஆய்த எழுத்து பகுதியில் முழுமையாக பதிவிறக்கம் (Download) செய்து கொள்ளலாம்.

**அல்லது**

**https://ayidhaezhuthu.in** என்ற இணையத்தளத்தில் பதிவிறக்கம் (Download) செய்து கொள்ளலாம். அவ்வாறே தங்களது ஆய்வுக்கட்டுரைகளை இந்த இணையத்தளத்தின் வழியாக அனுப்பலாம்.

# பொருளடக்கம்


1. சங்க இலக்கியங்களில் பெண்

***முனைவர் ம.புவனேஸ்வரி** - 1

2. பெண்ணிற் பெருந்தக்க யாவுள

***முனைவர் எம்.ஆர்.தேவகி** - 5

3. சங்க இலக்கியத்தில் நெய்தல் நில பெண்கள்

***சி.தேவேந்திரன்** - 7

4. சிறுபஞ்சமூலம் உணர்த்தும் இல்லாளின் மாண்புகள்

*** தோ.எழிலரசி** - 10

5. சிலம்பால் உயர்ந்தவள் உயர்த்தப்பட்டவள்

***முனைவர் க.கீதா** - 12

6. பெரியபுராணத்தில் பெண்கள்

***ஏ.ராஜசசிகுமார்** - 15

7. சங்க இலக்கிய நீர் நிலைகள்

***சே.சரத்குமார்** - 17

8. சங்க இலக்கியங்களில் பெண்சார் தொழில்கள்

***க.சந்தியா** - 20

9. இரட்டைக்காப்பியங்களில் தெய்வமும் பெண்ணும்

***முனைவர் மு.சிவபைரவி** - 24

10. கற்புக்கோட்பாட்டில் பெண்ணியம்

***முனைவர் ச.சுபாஷ்** - 26

11. காவியத்தலைவி காந்தருவதத்தை

***முனைவர் ம.உமாமகேஸ்வரி** - 29

12. சங்ககாலப் பெண்புலவர்கள் பாடல்களில் தலைவியின் அகவாழ்வு

***முனைவர் ஐ.வள்ளி** - 32

# சங்க இலக்கியங்களில் பெண்

***முனைவர் ம.புவனேஸ்வரி**, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, எஸ்.கே.எஸ்.எஸ்.கலைக் கல்லூரி, திருப்பனந்தாள்.

தமிழ்ப் பண்பாட்டின் தொன்மைக்குச் சான்றாகத் திகழ்பவை சங்க இலக்கியங்களாகும். கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே ஓர் உயரிய பண்பாட்டு வாழ்க்கை நிலைபெற்று இருந்தமையை உணரும்போது தமிழினத்தின் தொன்மையை எண்ணி வியப்படையாமல் இருத்தல் இயலாது. தமிழரின் அகவாழ்விலும் புறவாழ்விலும் பெண்மையின் பங்களிப்பு இன்றியமையாதது. போற்றத்தக்கது. சங்ககாலச் சமூகத்தின் சூழலுக்கேற்பப் பெண்களுக்குச் சில கட்டுப்பாடுகள் இருந்திருப்பினும் அவர்கள் கல்வி கேள்விகளில் வல்லவர்களாகவும் செயலாற்றல் மிக்கவர்களாகவும் விளங்கினர். சங்க இலக்கியங்களில் பெண்களின் நிலைபற்றி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**அக இலக்கியங்களில் பெண்கள்**

சங்க அக இலக்கியங்கள் ஐந்திணை மக்களின் வாழ்வியல் முறைகளைக் காட்டுகின்றன. களவியல், கற்பியல் என்னும் இருநிலைகளில் அமைந்துள்ளன. அச்சம், நாணம், மடம் முதலியவை பெண்மையின் குணங்களாகச் சொல்லப்பட்டிருப்பினும் களவு வாழ்க்கையில் பெண்கள் தங்கள் விருப்பத்திற்கேற்ப வாழ்க்கைத்துணையைத் தேர்ந்தெடுத்து மணந்துகொண்ட நிலையையும் காணமுடிகிறது. பருவம் எய்திய பெண்களை இல்லத்தில் பாதுகாத்தல், அவர்களது நடவடிக்கையில் மாற்றம் காணப்படின் இற்செறித்தல் முதலியன இருந்தாலும் ‘அறத்தொடு நிற்றல்’ மூலம் பெற்றோர்களிடம் திருமணத்திற்கு அனுமதி பெற்ற நிலையைக் காணலாம். அதிலும் தலைவி தன் உள்ளக் கருத்தைத் தோழியிடம் நேரடியாக வெளிப்படுத்தாமல் குறிப்பாக உணர்த்தும் பாங்கு நனி சிறந்ததாகும்.

விளையாடும்போது விட்டுச் சென்ற புன்னை விதை முளைவிட்டிருப்ப, அதற்குத் தலைவி நெய்யும் பாலும் ஊற்றி வளர்க்க, அதுகண்ட தாய் அப்புன்னையைத் தலைவியின் தங்கை என்று சிறப்பித்தாள். அப்புன்னை மரத்தின் கீழ்நின்று தலைவனோடு நகைத்துப் பேச நாணும் தலைவியின் நாகரிகம் இன்றைய தலைமுறையினருக்கு ஒரு மிகச்சிறந்த வழிகாட்டுதலாகும்.

**விளையாட் டாயமொடு வெண்மணல் அழுத்தி**

**மறந்தனம் துறந்த காழ்முளை அகைய**

**நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப**

**நும்மினுஞ் சிறந்தது நுவ்வை ஆகுமென்று**

**அன்னை கூறினள் புன்னையது சிறப்பே**

**அம்ம நாணுதும் நும்மொடு நகையே..** (நற்.172:1-6)

**இல்லறத்தில் பெண்கள்**

இல்லத்தின் தலைவியாக விளங்கும் பெண் இல்லாள், மனைக்கிழத்தி, பேரில் கிழத்தி, வாழ்க்கைத்துணை முதலிய பெயர்களில் சுட்டப்பட்டாள். அவள் இல்லத்திற்கு விளக்காக இருந்து ஒளியூட்டுபவள் என்பதை,

**மனைக்கு விளக்காகிய வாணுதல்** (புறம்.314:1)

என்று புறநானூறு போற்றுகிறது. ஓர் ஆடவன் மாண்புமிக்க மனைவியைப் பெற்றிருப்பின் அவனிடம் இல்லாதது ஏதுமில்லை என்று தெய்வப்புலவர் குறிப்பிட்டுள்ளார்.

**இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்**

**இல்லவள் மாணாக் கடை. (குறள்-53)**

பிசிராந்தையார் என்னும் புலவர் தனக்கு ஏன் நரைமுடி தோன்றவில்லை என்பதற்கான காரணங்களைச் சொல்லும்போது முதலில் தன் மனைவி மாட்சிமை மிக்கவள் என்று கூறிப் பெருமிதம் கொள்வதைக் காணமுடிகிறது.

**யாண்டு பலவாக நரையில ஆகுதல்**

**யாங்கா கியரென வினவுதி ராயின்**

**மாண்டஎன் மனைவியொடு மக்களும் நிரம்பினர்… (புறம்.191:1-3)**

பெண்கள் வாழ்வியல் ஒழுக்கங்களை, இல்லற மாண்புகளைத் தம் பெற்றோரிடமிருந்து இயல்பாகக் கற்றனர். தேனும் பாலும் கலந்த சோற்றைப் பொற்கலத்தில் ஏந்திச் செவிலித்தாய் ஊட்டமுற்பட அதனை உண்ண மறுத்துப் போக்குக் காட்டி ஒளிந்து கொள்ளும் செல்வந்தர் வீட்டுப் பெண்ணொருத்தி, தான் மணந்து கொண்ட கணவனது இல்லத்தில், வேளைக்கு உணவு இல்லாத வறிய நிலையிலும் தன் தந்தையின் செல்வத்தை எண்ணாமல் செம்மையாக வாழ்க்கை நடத்துவதைக் கண்டு நற்றாய் வியப்படைவதை நற்றிணை பாடியுள்ளது.

**…… …… ….சிறுவிளையாட்டி**

**அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந் தனள்கொல்**

**கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்**

**கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்**

**ஒழுகுநீர் நுணங்கறல் போலப்**

**பொழுது மறுத்துண்ணும் சிறுமது கையளே (நற்.110:9-12)**

இல்லத் தலைவி விருந்து புறந்தருதல், சுற்றம் ஓம்பல் முதலிய தனது கடமைகளில் சிறந்து விளங்கியமையை அறியமுடிகிறது. மிகக்குறைந்த உணவே இருப்பினும் அதனை முறையாகப் படைத்துப் பலரை உண்பிக்கும் செயலாற்றல் இல்லக்கிழத்தியிடம் இருந்தது.

**….. …… …உள்ளது**

**தவச்சிறி தாயினும் மிகப்பல ரென்னாள்**

**நீள்நெடும் பந்தர் ஊண்முறை ஊட்டும்**

**இற்பொலி மகடூஉ… ….. ……. (புறம்.331:6-9)**

தலைவனுடன் ஊடல் கொண்டிருக்கும் நிலையிலும் தலைவி விருந்தினர் வந்துவிட்டால் அவ்வூடலை மறைத்துப் புன்னகையுடன் விளங்குவாள் என்பதால் தலைவன் விருந்தினரை அழைப்பதை,

…… …… ….. நப்புலந்து

அட்டி லோளே அம்மா அரிவை

எமக்கே வருகதில் விருந்தே சிவப்பாளன்று

சிறியமுள் எயிறு தோன்ற

முறுவல் கொண்ட முகங்காண் கம்மே. (நற்.120:8-12)

என்று நற்றிணை பாடியுள்ளது.

**புற இலக்கியங்களில் பெண்கள்**

புற இலக்கியங்கள் பெண்களின் விருந்தோம்பல் முதலிய இல்லற மாண்புகளை எடுத்துரைப்பதோடு பெண்களின் வீரம், நாட்டுப்பற்று முதலிய உணர்வுகளையும் சிறப்பிக்கின்றன. முல்லைநிலப் பெண்கள் காளைகளை அடக்கும் வீரர்களையே விரும்பி மணந்தனர்.

கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையும்

புல்லாளே ஆயமகள்

அஞ்சார் கொலையேறு கொள்பவர் அல்லதை

நெஞ்சிலார் தோய்தற்கு அரிய உயிர்துறந்து

நைவாரா ஆயமகள் தோள். (முல்லைக்கலி.3:63-67)

காளையின் கோட்டினைக் கண்டு அஞ்சும் ஆடவனை மறுமையிலும் மணப்பதற்கு ஆயமகள் விரும்பமாட்டாள் என்று அவளது மனத்திட்பம் கூறப்பட்டுள்ளது.

புறநானூற்றுப் பாடலொன்றில் 'நின்மகன் யாண்டுளன்' என்று வினவிய பெண்ணிற்கு ஒரு வீரத்தாய் கூறும் விடை முற்றிலும் வேறுபட்டது.

புலிசேர்ந்து போகிய கல்லளை போல

ஈன்ற வயிறோ இதுவே;

தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே! (புறம்.86:4-6)

புலியானது தங்கிச் சென்ற மலைக்குகையைப் போல அவனை ஈன்ற வயிறு இதுவே; போர்க்களத்திலேதான் அவனைக் காண முடியும் என்று கூறுவதால் வீரமகனைப் பெற்ற தாயின் பெருமிதம் வெளிப்படுகிறது.

அள்ளூர் நன்முல்லையார் என்னும் பெண்பாற்புலவர் பாடலில் ஓர் இல்லக்கிழத்தி நடுகல்லைக் கைதொழுது பணிந்து, தான் இடையறாது விருந்தினரைப் பெற வேண்டுமென்றும் தன் தலைவனுக்கு வேந்துவயிற்பிரிவு (அரசனுக்கு உறுதுணையாகப் போருக்குச் செல்லுதல்) அமைய வேண்டுமென்றும் வழிபடுவதாகப் பாடியுள்ளார்.

நடுகல் கைதொழுது பரவும் ஒடியாது

விருந்தெதிர் பெறுகதில் யானே; என்னையும்

…… ……… …….வேந்தனொடு

நாடுதரு விழுப்பகை எய்துக எனவே. (புறம்.306:4-7)

மிகத் தொன்மையான இனக்குழுச் சமூக வாழ்வியலைக் காட்டும் இப்பாடலில் தமிழ்க்குடிப் பெண்ணின் தன்னலமற்ற வழிபாடும் சமூகநலன் மீது கொண்ட ஆர்வமும் வெளிப்படக் காணலாம்.

போரில் பகைவரிடம் புறமுதுகு காட்டித் தப்பிவந்த மகனைக் காட்டிலும் பகைவரை எதிர்த்துப் போரிட்டு வீரமரணத்தைத் தழுவிய மகனையே சங்ககாலத் தாயர் விரும்பினர்.

'களிறெறிந்து பட்டனன்' என்னும் உவகை

ஈன்ற ஞான்றினும் பெரிதே… …… ….. (புறம்.277:3-4)

போரில் பகைவரின் யானையை அழித்து உயிர் துறந்த தன் மகனை எண்ணி, ஈன்ற பொழுதினும் பேருவகை அடையும் தாயின் நாட்டுப்பற்று வணங்கத் தக்கதாகும். தன் மகன் புறங்கொடுத்தான் எனக் கேட்ட தாய் அடைந்த சினத்தையும் மேற்கொண்ட உறுதியையும் காக்கைப் பாடினியார் நச்செள்ளையார் என்னும் பெண்பாற்புலவர் (புறம்-278) பதிவு செய்துள்ளார். முதல்நாள் போரிலும் அதற்கு முந்தைய நாள் போரிலும் தன் தந்தையையும் கணவனையும் அடுத்தடுத்துப் பறிகொடுத்த பெண்ணொருத்தி போர்ப் பறை கேட்டவுடன் தன் ஒரே புதல்வனைப் போருக்குத் தயார் செய்து அனுப்புவதாக அமைந்த ஒக்கூர் மாசாத்தியார் பாடல் (புறம்-279) படிக்கத் தொடங்கும்போதே நெஞ்சைப் பதறச் செய்கிறது.

எண்ணரும் பாசறைப் பெண்ணொடும் புணரார் (தொல்.கற்.1121)

என்று பெண்கள் போர்க்களத்திற்குச் செல்லும் வழக்கம் இல்லை என்று தொல்காப்பியம் குறிப்பிட்டுள்ளது. எனினும் பழந்தமிழ்ச் சமூகத்தில் மகளிரின் வீரவுணர்வும் நாட்டுப்பற்றும் ஆடவருக்குச் சற்றும் குறையாத அளவில் அமைந்த பெற்றியினை அறிந்தின்புறலாம்.

**பரத்தைப் பெண்டிர்**

சங்ககாலச் சமூகத்தில், பெண்டிருள் பரத்தையர் என்னும் பிரிவினர் இருந்தனர். இவர்கள் மணம் செய்து கொள்ளாமல், பொருளுக்காக இன்பம் நல்கும் பொதுப் பெண்டிராக இருந்தனர். தலைவன் தலைவியைப் பிரியும் பிரிவுகளுள் 'பரத்தையிற் பிரிவு' என்பதும் அனுமதிக்கப்பட்டிருந்தது. எனினும் தலைவியும் தோழியும் பரத்தையை இகழ்ந்துரைக்கும் பாடல்கள் அக இலக்கியங்களில் காணப்படுகின்றன.

பரத்தையரது கீழ்மை நிறைந்த மனதில் மெய்மை தோன்றுதல் அரிது. அவர்கள் குழந்தைகளைப் பெற்று கற்புடைய பெண்டிராகக் குலமகளிரைப் போல வாழ்தல் அதனினும் அரிதாகும் என்று தோழி கூறுவதை,

…….. ……. ….மாணிழை மகளிரை

எம்மனைத் தந்துநீ தழீஇயினும் அவர்தம்

புன்மனத்து உண்மையோ அரிதே அவரும்

பைந்தொடி மகளிரொடு சிறுவர்ப் பயந்து
நன்றி சான்ற கற்போடு
எம்பா டாதல் அதனினும் அரிதே. (நற்.330:6-11)

என்று நற்றிணைப் பாடல் பதிவு செய்துள்ளது.

சோழன் நலங்கிள்ளி வஞ்சினம் கூறுகையில், பகைவர் வருந்தும்படித் தான் போரிடவில்லையெனில், தீதில்லாத நெஞ்சத்தால் காதல் கொள்ளாத பொதுமகளிரின் பொருந்தாத புணர்ச்சியிடையே தன் மாலை துவள்வதாக என்று கூறுவதால் அவ்வொழுக்கத்தை இழிவாகக் கருதியுள்ள நிலையையும் அறியலாம்.

வருந்தப் பொரேஎ னாயிற் பொருந்திய
தீதில் நெஞ்சத்துக் காதல் கொள்ளாப்
பல்லிருங் கூந்தல் மகளிர்
ஒல்லா முயக்கிடைக் குழைகஎன் தாரே! (புறம்.73:11-14)

திருவள்ளுவர் இம்மகளிரைப் பொருட்பெண்டிர், வரைவில் மகளிர் என்றெல்லாம் குறிப்பிட்டு இவ்வொழுக்கத்தைச் சாடுகிறார்.

பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில்
ஏதில்பிணந் தழீஇயி யற்று. (குறள்-913)

என்று வன்மையாக இடித்துரைத்துள்ளார்.

**கைம்மை மகளிர்**

சங்ககாலத்தில் கணவனை இழந்த மகளிர் நிலை இரங்கத் தக்கதாக இருந்தது. அவர்கள் உணவு, உடை முதலியவற்றில் தொடங்கி அனைத்து நிலையிலும் எவ்வித சிறு இன்ப நுகர்வும் தடை செய்யப்பட்டவர்களாக வாழ்ந்தனர். மறுமணத்திற்கு அவர்கள் உரிமையற்றவர்களாக இருந்தனர். அதனால் புலன் உணர்வுகளுக்கு அவர்கள் ஆட்பட்டுவிடாதபடிச் சமுதாயம் அவர்களுக்குப் பல கட்டுப்பாடுகளை விதித்திருந்தது. பூதப்பாண்டியன் இறந்தபின் அவனது மனைவியும் அரசியுமான பெருங்கோப்பெண்டு கைம்மை நோன்பை வெறுத்து, தீப்பாய்ந்து உயிர்விட்ட நிகழ்ச்சி புறநானூற்றில் (246) இடம்பெற்றுள்ளது. அப்பாடல் அரசியின் கூற்றாகவே அமைந்து அன்றைய சூழலில் கைம்மை மகளிரின் கொடுமையான வாழ்வைச் சித்தரிக்கும் சிறந்த சான்றாகும்.

**தொகுப்புரை**

சங்ககாலப் பெண்பாற் புலவர்களின் எண்ணிக்கையை நோக்குங்கால் அக்காலப் பெண்களின் கல்வி மேம்பாடு தெற்றெனப் புலனாகிறது. அதியமானுக்கும் தொண்டைமானுக்கும் இடையே எழவிருந்த போரைத் தூதின் மூலம் தடுத்து நிறுத்திய ஔவையாரது புலமையும் மதிநுட்பமும் ‘பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் புவிபேணி வளர்த்திடும் ஈசன்’ என்னும் பாரதியின் வாக்கை நினைவூட்டுகின்றன. குடும்ப நிர்வாகத்திலும் அரசியலிலும் மகளிர் அக்காலத்தில் சிறந்து விளங்கியுள்ளனர். சிறு வணிகத்தில் ஈடுபட்டுப் பொருளீட்டிய மகளிரையும் சங்கப் பாடல்கள் சுட்டுகின்றன. அன்றைய சமுதாயச் சூழ்நிலைக்கேற்பச் சில கட்டுப்பாடுகளுக்கும் ஆட்பட்டுள்ளனர். காலப்போக்கில்தான் ஆணாதிக்கம் மேலோங்கி பெண்ணடிமை நிலை தோன்றியுள்ளது.

# பெண்ணிற் பெருந்தக்க யாவுள

***முனைவர் எம்.ஆர்.தேவகி,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, த.ஞா.அ.ம.கலைக் கல்லூரி, மயிலாடுதுறை.

**முன்னுரை:-**

உலகப் பொதுமறையாம் திருக்குறள் உலகில் மாந்தர்களாய்ப் பிறந்திட்ட அனைவருக்குமான அறக்கருத்துக்களை எக்காலத்திற்கும் ஏற்ற வகையில் எடுத்துரைக்கின்றது. இந்த உலகில் மனிதர்களாய் பிறந்திட்ட யாவருக்கும் ஏற்ற நிலையான கருத்துக்களைக் கூறியதால் தெய்வநூல் என்ற பெயரும் பெற்றுள்ளது. இந்த உலகில் நாம் தோன்றுவதற்கு அடிப்படைக் காரணமான இறையை (இயற்கையை) முதற்கண் போற்றுகின்ற வள்ளுவர் இவ்வுலகில் உயிர்கள் வாழ்வதற்கும் தோன்று வதற்கும் காரணமான நீரின் சிறப்பினை உணர்த்த வான் சிறப்பினை இரண்டாவது அதிகாரமாக படைத்துள்ளார். இவ்வுலகின் நிலையாமையை உணர்ந்து பற்றற்ற வாழ்க்கை வாழ்ந்து சிறந்தவர்களின் பெருமையை கூறி அடுத்ததாக அறனை வலியுறுத்துகிறார். அதற்கு அடுத்ததாக இல்வாழ்க்கையின் சிறப்பினை எடுத்துரைக்கிறார். இல்வாழ்க்கை சிறப்புற வாழ்க்கைத் துணைநலம் இன்றியமையாதது ஆதலால் அதனை விளக்க தனி அதிகாரமே படைத்துள்ளார். பெண்களின் சிறப்பை, பெருமையை, வலிமையை உணர்த்துவதற்கு இதைவிட சிறந்ததொரு களம் இல்லை. இந்த அதிகாரத்தின்வழி வள்ளுவர் கூறும் பெண்களின் இயல்புகளை ஆராயும்வழி இக்கட்டுரை அமைகிறது.

**வாழ்க்கைத் துணை:-**

மனமொத்த இருவரும் பெரியோர்கள் ஆசியுடன் வாழ்வில் இணையும் நிகழ்வை கரணம், என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. வாழ்க்கை முழுமையும் துணையாக வருபவள் ஆதலால் வாழ்க்கைத் துணை என்று மனைவியைக் குறிப்பிடுகின்றனர். வள்ளுவர் வாழ்க்கைத் துணை நலம் என்று அவளின் பெருமையை புலப்படுத்துகின்றார். தன் கணவனின் இயல்பையும், வருவாயையும் அறிந்து அதன்படி குடும்பத்தை ஏற்று நடத்துபவளே வாழ்க்கைத் துணைவி எனப்படுகிறாள். இல்வாழ்க்கைக்குரிய பண்புடையவளாக ஒரு பெண் விளங்கினால் எத்தகைய சூழ்நிலையையும் சமாளிக்க இயலும். குடும்பத்தில் அமைதி, மகிழ்ச்சி நிலவ வேண்டுமெனில் இத்தகைய பெண்ணால்தான இயலும். அதனால்தான் 'வாழ்க்கைத் துணை நலம்' என்று குறிப்பிடுகிறார்.

**பெண்ணின் திண்மை:-**

பெண்கள் உடலளவில் மென்மையானவராகப் படைக்கப்பட்டிருந்தாலும் மனதளவில் மிகவும் உறுதித் தன்மை வாய்ந்தவராக விளங்குகின்றனர். பெண்களின் சக்தியை

**"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்**
**திண்மையுண் டாகப் பெறின்" (54)**

என்ற குறட்பாவால் எடுத்துக்காட்டுகிறார். ஒரு பெண் கற்பு என்ற உறுதிப்பொருளை திண்மையாகக் கொண்டுவிட்டால் அவளைவிட பெருமை உடையவை இவ்வுலகில் ஏதுமில்லை என்கிறார். கண்ணகி தன் கற்புத்திறத்தால் மதுரை மாநகரையே தீக்கிரையாக்கியமையை சிலப்பதிகாரம் குறிப்பிடுவதன் மூலம் அறியலாம். கற்புடைய பெண்ணின் சொல்லுக்கு இயற்கையே தலை வணங்கும் என்பதை

**"தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை"**

என்ற குறட்பாவால் விளக்குகின்றார். கண்ணகி தன் மனக்குமுறலை கூறுமிடத்து

**"பட்டாங்கு யானுமோர் பத்தினியே யாமாகில்**
**ஒட்டேன் அரசோ டொழிப்பேன் மதுரையுமென்**
**பட்டிமையும் காண்குறுவாய் நீ" (வஞ்சினமாலை 36-38)**

என தன் கற்புத்திறத்தால் சூளுரைக்கின்றாள். மேலும்

**"யானமர் காதலன் தன்னைத் தவறு இழைத்த**
**கோநகர் சீறினேன் குற்றமிலேன் யானென்று**
**இடமுலை கையால் திருகி மதுரை**
**வலமுறை மும்முறை வாரா அலமந்து**
**மட்டார் மறுகின் மணிமுலையை வட்டித்து**
**விட்டாள் எறிந்தாள் விளங்கிழையாள்" (வஞ்சினமாலை 41-46)**

என்று கண்ணகி மதுரையை எரித்த பின்னரே காய்சினம் தணிந்த நிலையை இளங்கோ எடுத்துரைக்கின்றார். தன் கணவனின் இறப்பிற்குக் காரணமான மன்னனும் அரசியும் இறந்து விட்ட

பிறகும் கண்ணகி ஏன் மதுரையைத் தீக்கிரையாக்கினாள் என்று சிந்திக்கையில், ஒரு பெண்ணிற்கு உரிய உடைமைகளுள் உலகத்தில் கணவனை ஒப்பாகக் கருதுவது வேறெதுவும் இல்லை. ஆகையால் தன் கணவன் அழிவை நோக்கப் பிற அழிவெல்லாம் மிகவும் எளிமையாக அவளுக்கு தோன்றியதை உணர்த்தவே இவ்வாறு இளங்கோவடிகள் எடுத்துரைப்பதை உணரமுடிகிறது. இந்நிகழ்வுகள் பெண்ணின் கற்புத் திறத்தின் வலிமையை உணர்த்தக் காணலாம்.

**நிறை காக்கும் பண்பு:-**

மகளிர் மனத்திண்மை வாய்க்கப் பெற்றவர்கள். ஆதலால் அவர்களை சிறை போன்ற கட்டுப்பாட்டில் வைத்துக் காப்பதன் மூலம்தான் அவர்களை கற்புடையவர்கள் என்று சொல்லத்தக்கவர்களாக ஆளாக்க இயலும் என்பது அறிவற்ற செயல் என்கிறார் வள்ளுவர். பெண்களுக்கு அவர்களுடைய கற்பினால் அமைந்த காவலே சிறந்தது என்கிறார். அது இயல்பானதும் கூட, அதுவே வலிமையும் ஆகும். அரக்கனாகிய இராவணனிடம் அகப்பட்டுக்கூட சீதை கற்பிழக்காமல் இருந்தமைக்கு சீதையின் கற்புத் துணிவே காரணமாகும். நிறை என்ற சொல்லுக்கு "அழிவின்மை, ஆடூஉக் குணம் நான்கில் காப்பனகாத்துக் கடிவன கடியும் திண்மை, இடை, உறுதிப்பாடு, துலாராசி, நியாயம், நிறுத்தல், அளவு, நிறையென்னேவல், நிறைவு, நூறுபலம், மாட்சிமை, வரையறை" என பல பொருள் தருகிறது கழகத் தமிழ் அகராதி. இதில் உறுதித்தன்மை, நிலைநிறுத்தல் போன்ற பொருளில் இச்சொல் அதிகம் பயன்பட்டு வருதல் புலப்படக் காணலாம். கற்பு என்னும் உறுதிப்பொருளை நிலையாகக் கொண்டு வாழ்பவருக்கு எந்தக் காவலும் தேவையில்லை என்பதன் வழி ஒரு பெண்ணின் கற்புக்கு அவளே காவலன்றி பிறர் காவல் அவளை அவமதிப்புச் செய்யும் செயலாகவும் மாறக்கூடும் என்பதையும் குறிப்பாக உணர்த்தக் காணலாம்.

**ஆடவர்க்கு பெருமை:-**

பெண்களின் சிறப்பினை வேருக்கு ஒப்பாகப் புனைந்துரைப்பர் புலவர் பெருமக்கள். வேரின் செயல்பாடு கண்களுக்குப் புலனாகாது. ஆனால் மரத்திற்கு அடித்தளமே வேர்தான். பெண்களின் செயல்பாடும் அத்தகையதுதான். ஒரு குடும்பம் தலைசிறந்து விளங்க வேண்டும் என்றால் அக்குடும்பத் தலைவி நற்பண்புகள் வாய்க்கப் பெற்றவளாக அமையும்போதுதான் நடைபெறும். இல்லையெனின் அவளை மனைவியாக வாய்க்கப்பெற்றவனும் தலைகுனிய நேரிடும் என்பதை,

**"புகழ்புரிந்த இல்லிலோர்க்கு இல்லை இகழ்வார்முன்**
**ஏறுபோல் பீடு நடை" (குறள்-59)** என்றும்,

**"மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை**
**எனைமாட்சித் தாயினும் இல்" (குறள் -52)**

என்ற குறளின்வழி இல்வாழ்க்கை நடத்துவதற்குரிய நற்பண்புகள் இல்லாத ஒரு மனைவியை பெற்றவனுடைய வாழ்க்கை, எத்துணைச் சிறப்புடையதாக அமைந்தாலும் அதனால் யாதொரு பயனும் இல்லை என்கிறார். அதனால்தான் ஒரு ஆடவனின் பெருமையையும், தலை நிமிர்ந்த நடையையும் நிர்ணயிப்பது பெண்களின் நடத்தையில் உள்ளது என்கிறார். இத்தகைய சிறப்புப் பெற்ற பெண் ஒருத்தியை மணந்தவனுக்கு வாழ்க்கையில் இல்லை என்பதே கிடையாது என்கிறார். அப்பண்பு இல்லாவிடில் அவனிடத்து உள்ளது என்று கூறத்தக்கது யாதும் இல்லை என்கிறார். இதனை,

**"இல்லதென் இல்லவள் மாண்பானாள் உள்ளதென்**
**இல்லவள் மாணாக் கடை" (குறள் - 53)**

என்ற குறள் தெளிவுப்படுத்துகிறது.

**சோர்விலாள் பெண்:-**

பெண் என்பவள் பொறுமையின் தியாகத்தின் மறுஉருவம். எத்தகைய துன்பம் வந்தாலும் நாணல் போன்று நிமிர்ந்து நிற்பவள். கற்புத் திறத்தோடு தன்னைக் காத்துக் கொள்வது மட்டுமன்றி, தன் கணவனையும் பாதுகாத்துப் பெருமைமிக்க குடிப்பெருமையையும் காத்து, தம் இல்லறக் கடமைகளில் தவறாது செயல்படுபவளே நல்ல மனைவியாவாள். இத்தகைய இல்லறத்தில் எத்தனை சோதனைகள், துயரங்கள், உடல்நலக் குறைகள் வந்தாலும் மனச்சோர்வின்றி செயல்படுபவள் பெண். இத்தகைய பெண்டிரைத்தான் வள்ளுவர் ஏந்திப் புகழ்கின்றார்.

**"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற**
**சொற்காத்துச் சோர்விலாள் பெண்" (குறள் - 56)**

என்ற குறளில் பெண்களின் சிறப்பைப் புலப்படுத்துகின்றார். இன்றைக்கு பெரும்பாலும் வரக்கூடிய நோய்களுக்கு அடிப்படைக் காரணமாக அமைவது மனச்சோர்வுதான். தற்கொலை, கொலை போன்ற செயல்பாடுகளுக்கும் இந்த மனச்சோர்வுதான் காரணமாக அமைகிறது.

**முடிவுரை:-**

சக்தியின் மறுவடிவமாகக் கருதப்பெறும் பெண்களை அடுக்களைக்குள் பூட்டி வைத்து அழகு பார்த்த ஆண் சமூகமே இன்று அதிசயிக்கும் வகையில் ஆணுக்கு நிகராக அனைத்துத் துறைகளிலும் பெண்கள் தடம்பதித்து வருகின்றனர். சமூகத்தில் எத்தகைய சிறப்புடையவர்களாக விளங்கினாலும் இல்லறக் கடமைகளில் செம்மையாகச் செயல்படும்போதுதான் பெண்களின் சிறப்பு மேன்மையடைகிறது. இத்தகைய வல்லமை பெற்ற பெண்களைச் சிறப்பிக்கும் வகையில் அன்றே 'வாழ்க்கைத் துணை நலம்' என்ற அதிகாரத்தின்வழி பெண்களின் ஆற்றலை உணர்த்தியுள்ள வள்ளுவரின் அறிவான்மை அனைவரும் அறிந்தவொன்றாகும்.

# சங்க இலக்கியத்தில் நெய்தல் நில பெண்கள்

***சி.தேவேந்திரன்,** முனைவர் பட்ட ஆய்வாளர், (பகுதி நேரம்), அரசினர் கலைக்கல்லூரி (தன்னாட்சி), கும்பகோணம் - 612 002.

கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தலாகும். **'வருணன் மேய பெருமணல் உலகம்'** என்று தொல்காப்பியம் இந்நிலத்தைக் குறிப்பிடுகிறது. இந்நில பெண்கள் கடலுக்குச் சென்ற தம் தலைவன் வருகையை நினைந்து வருந்தும் நிலையிருப்பதால் இரங்கலும் இரங்கல் நிமித்தமும் உரிப்பொருளாக அமைந்துள்ளனர். இந்நிலவாழ் பெண்களின் நிலையினைக் இக்கட்டுரை விளக்குகிறது. பரதவர் பரத்தி (பெண்)களையும் குறிக்கிறது. பிற்காலத்தே தோன்றிய அகப்பொருள் விளக்கம் நெய்தல் நில பெண்களை பரும அல்குல்பரத்தி, நுளைச்சி, நுளைச்சியர், பரத்தியர், அளத்தியர் என்று கூறுகின்றது.

இலக்கியம், இலக்கணம், உரை நிலைகண்டு, செப்பேடுகள் ஆகியவற்றில் பரதவர் பரதர் எனும் சொற்கள் காணப்படுகின்றன.

"பரவையை (கடலை) ஆண்டு தொழில்படுத்துநரும் அப்பரவையை அடுத்து குடியிருப்புக் கொண்டு உரைநரும் ஆகிய பண்டைத் தமிழ் மக்கள் அக்கரணியம் கருதிப் பரதவர் எனப்பட்டனர் என்னும் இரா.இளங்குமரன் கூற்று நினைக்கத்தக்கவையாகும்.

**நெய்தல் நில பெண்கள்:**

சங்க அகப்பாடல்களில் 'சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறாஅர்' என்ற மரபிற்கு இணங்க இயற்றப்பட்ட நெய்தல் அகப்பாடல்களில் பெண்கள் தலைவி, தோழி, செவிலி, நற்றாய் என சுட்டப்பெற்றுள்ளனர். அப்பாடல்களில் பெண்களின் நிலைகளும் அவர்களின் தொழில்களும் குறிக்கப்பெற்றுள்ளன.

ஆண்களை சார்ந்தே பெண்களின் வாழ்வு தொடங்கியிருக்கின்றன. 'உடை இவள் உயிர்வாழாள் நீ நீப்பின்' (பாலைகலி 3) தலைவனைப் பிரிந்தால் உயிர் வாழாத வளாகி யிருக்கிறாள். அத்துடன் கற்புநிலை வழாத நிலையிலும் இருந்திருக்கிறாள். "வட மீன் போல் தொழுது ஏத்த வயங்கிய கற்பினாள் (பாலைகலி 2) என்ற பாடல் வரிகளால் பெண்கள் தொழுது போற்றும் கற்புடையவளாக இருந்தமையை அறிய முடிகின்றது.

நெய்தல் நில பெண்கள் மீனை உலர வைத்தல், மீன் விற்றல், உப்புக் காய்ச்சுதல், சங்கறுத்தல், முத்துப் பிரித்தெடுத்தல் ஆகிய தொழில்களை செய்து வந்துள்ளனர். அத்துடன் தான் சார்ந்திருக்கின்ற சமுதாயத்தின் மீது அக்கறை கொண்டவளாகவும் இருந்துள்ளார்கள். தலைவனைப் பேணுதல், குழந்தைகளை வளர்த்தல், தலைவன் தவறு செய்தபோது மன்னிக்கும் தன்மை, தலைவன் வருகைக்காக காத்திருத்தல் போன்ற நிலையில் அறத்தன்மையோடு இருந்தமையை நெய்தல் அகப்பாடல் படம் பிடித்துள்ளன.

**காதல் வயப்பட்ட பெண்கள்:**

காதல் வயப்பட்ட பெண்கள் தன் தலைவன் வரும் குறியின்கண் துன்பம் ஏதாவது நேர்ந்துவிடுமோ! என்றஞ்சினர். தலைவன் திருமணம் செய்து கொள்ளாமல் காலம் நீட்டித்தவிடத்து தன் நிலையினை எண்ணி பயந்தனர். மேலும் தன் காதலை ஊரர் அறிந்துவிட அல்லது தாய்க்கு தெரியும் போது அலர் தூற்றலிலும் வீட்டுக் காவலில் வைக்கப்பட்ட போதும், தலைவன் தொழில் நிமித்தமாக வேற்று நாடுகளுக்குச் சென்றப் பொழுது தனிமையில் வருந்துபவளாக பெண்கள் இருந்துள்ளனர்.

"நனந்தலை உலகமும் துஞ்சும்

ஒர் யான் மன்ற துஞ்சாதேனே " (குறுந் பா6)

தலைவனின் வருகை இல்லாமையால் அந்த இரவு உறக்கமின்றி தவிக்கின்ற நிலையினை ஆசிரியர் காட்டியுள்ளார். மற்றொரு செய்யுளில் ஊரார் சொற் கேட்டு தலைவியை தாய் வீட்டில் அடைத்து வைத்தமையை

“கவ்வை நல் அணங்கு வுற்ற, இவ்ஊர்

கொடிது அறி பெண்டிற் சொற்கொண்டு, அன்னை

கழ கொண்டனளே — தோழி”

என்ற கூற்றுவழி தலைவி தோழியிடம் சொல்லி புலம்புவதாக அமைந்துள்ளமையை அறிய முடிகின்றது.

**இரவில் வாராதே! பகலில் வா!**

தலைவி தலைவனை இரவில் வந்தால் ஏதாவது துன்பம் நேர்ந்துவிடும் என்றெண்ணி பகலில் தான் தந்தை கொணர்ந்த மீனை காய வைத்துக் கொண்டிருப்பேன் அங்கே வரச்சொல்லி அழைப்பதாக

“..... எந்தை

புணர் திரைப் பரப்பகம் துழை இத் தந்த

பல் மீன் உணங்கள் படுபுள் ஒப்புதும்

முண்டகம் கலித்த முதுநீர் அடைகரை

........................................................................

புன்னை அம் கானல், பகல் வந்தீம்” (அகம் 80 பா)

என்ற மருங்கூர்கிழார் பெருங்கண்ணனார் பாடலால் காணக்கிடக்கின்றன.

**மீனை உலர வைத்தல்:**

மீனவ பெண்கள் மன தைரியம் மிகுந்த குடியில் பிறந்தவர்கள். கணவன் கொண்டுவரும் மீன்களை பதப்படுத்தி காயவைத்து காக்கின்ற தொழிலை செய்துள்ளனர். அத்துடன் அதனை விற்பவர்களாகவும் இருந்துள்ளனர்.

“நீல் நிறப் பெருங்கடல் கலங்க, உள்புக்கு

மீன் ஏற் பரதவர் மகளே” (நற் 45 பா)

என்ற பாடல்வரிகள் பரத்தி தைரியம் நிறைந்தவள் குடியில் பிறந்தவள் என்பதையும்

“முடிவலை முகந்த முடங்கு இறாப் பரவைப்

படுபுள் ஓப்பலின் பகல் மாயந்தன்றே’ (நற் 52)

என்ற பாடல்வரிகளால் மீன்களை காய வைத்து பறவைகளிடமிருந்து அதனை காத்துள்ளனர் பரதவர் பெண்கள் என்பதறிய முடிகிறது.

**கணவனை தேர்ந்தெடுத்தலில் உயர்வு தாழ்வு:**

நெய்தல் நில பெண்கள் தான் விரும்பியவர்களையோ தன்னை விரும்புகின்றவர்களையோ தேர்ந்தெடுப்பதில் உயர்வு, தாழ்வு இருந்துள்ளன.

“ நினைச் சுறா அறுத்த உணங்கல் வேண்டி

இனப்புள் ஓப்பும் எமக்கு நலன் எவனோ?

புலவு நாறுதும், செல் நின்றீமோ!

எம்மனோரில் செம்மலும் உடைத்தே! (நற் 45)

என்ற பாடல் வரிகளில் மீனவ பெண்கள் உயர்ந்த செல்வந்த ஆண்களை விரும்பாமல் மீனவ ஆண்களையே செம்மையானவர்களை தேர்ந்தெடுத்துள்ளனர். நீயோ செல்வந்தரின் மகன், இவள் பரதவர் மகள், நீ செல்வர் மகன் யாம் கடலில் விளையும் பொருளால் வாழ்பவர்கள் உன்னை மணந்து கொள்வது பொருந்தாது எம்முள் (மீனவர்களுள்) செம்மையானவர்கள் உள்ளனர் என்று மறுத்துள்ள நிலை அறிய முடிகிறது.

**பெண் குழந்தை வளர்ப்பில் பெண்:**

நெய்தல் நில பெண்கள் தனது பெண் குழந்தைகளை ஒளி குன்றாமல் வளர்த்துள்ளனர். ஒரு பெண் தன் மகள் மணல் மேட்டில் சென்று பெண்கள் கூட்டத்தோடு விளையாடுகிறாள். அதனை அறிந்த தாய் அவ்வாறு வெளியில் விளையாடினாள் தன் மகளின் அழகு குன்றிவிடும் என்கிறாள். இதனை

“ஊதை ஈட்டிய உயர் மணல் அடைகரை

கோதை ஆயமொடு வண்டல் தை இ

ஓரை ஆடினும் உயங்கும் நின்ஒளி எனக்” (அக 60)

என்ற பாடலால் அறியலாம்.

**சமையலில் நெய்தல் பெண்:**

நெய்தல் நிலப் பெண்கள் நல்ல சமையல் செய்யக் கூடியவராகவும் இருந்துள்ளனர். இதனை,

"நெடுந் திமில் தொழிலொடு வைகிய தந்தைக்கு
உப்பு நொடை நெல்லின் மூரல் வெண் சோறு
அயிலை துழந்த அம்புளிச் சொரிந்து
கொடுமீன் தடியொடு குறுமகள் கொடுக்கும்" (அகம் 60)

என்ற பாடல் அடிகளால் கொடிய மீன்களை வேட்டையாடும் பரதவனின் மகள் தலைவி, அவள் உப்புக்கு தந்த நெல்லை அரிசியாக்கி அதனை சோறு சமைத்தல் அச்சோற்றுடன் புளிக்கரைத்து அயிலை மீன் குழம்பு வைத்து அத்துடன் கொழுவிய மீன் கருவாட்டுப் பொரி கறியுடன் தன் தந்தைக்கு உண்ணத் தருபவர் தலைவி என்று தோழி கூறுவதன் மூலம் பெண் சமையலில் சிறந்து விளங்கியதை அறிய முடிகிறது.

இதனை போன்று அறத்தன்மையுடை பெண் நிலையினை மற்றொரு செய்யுளில்

" நும்மினும் சிறந்தது, நுவ்வை ஆகும்' என்று
அன்னை கூறினாள், புன்னையது நலனே "

என்ற பாடல் நற்றிணைப் பாடலில் மகளுக்கு நிகராக அ∴றிணையான மரத்தை வளர்த்தாமையும் அதனையும் தன் சகோதரியாக நினைந்த அப்பெண்ணின் அறச்செயலையும் எண்ணுதற்குரியவையாகும்.

**கடற்கரையில் கணவனின் வருகைக்காக காத்திருந்த பெண்கள்:**

நெய்தல் நில பெண்கள் போராட்டமான வாழ்க்கையினை வாழ்ந்துள்ளனர் தன் கணவன் வீடு திரும்பும் வரை இறைவனை வேண்டுவதும் கடற்கரையில் உப்பு மேட்டில் நின்று தன் கணவரின் படகின் வருகைப் பார்த்திருந்தனர் என்பதை

"இன்னும் வாரார் வருஉம்
பல் மீன் வேட்டத்து என்னையர் திமிலே" (குறுந் 123)

என்ற ஐயூர் முடவனார் பாடல் அடிகளில் ஒரு பெண் வேட்டைக்குச் சென்ற தலைவன் வருகையை நோக்கி காத்திருந்தமை அறிய முடிகிறது. மேலும் விளைந்த உப்பை உப்பு வணிகர்களின் வண்டிகள் வரும் பாதை அருகாமையில் குவியலாக குவித்து வைத்திருக்கும் உப்பு குவியலின் அருகே மீன்களை பெண்கள் காய வைத்திருப்பர் அப்பொழுது உப்பு மேட்டின் மீது ஏறி நின்று மீன் வேட்டைக்கு சென்ற சுற்றத்தாரின் படகை' இது எந்தை திமில் அது நுந்தை திமில்' என்று கூறிக் கொண்டதை,

"கானல் இட்ட காவற் குப்பை
புலவு மீன் உணங்கல் படுபுள் ஒப்பி
மட நோக்கு ஆயமொடு உடன் ஊர்பு ஏறி
எந்தை திமில் அது நுந்தை திமில்' என (நறி 331)

என்ற உலோச்சனர் பாடல் வழி அறியமுடிகிறது.

இவ்வாறு நெய்தல் நில பெண்கள் துணிச்சல் மிகுந்த குடியில் பிறந்திருந்தாலும் அறம் செய்வதிலும் குழந்தை வளர்ப்பதும் சிறந்து விளங்கினர். ஒவ்வொரு நாளும் அச்சம் நிறைந்த வாழ்க்கை வாழ்ந்தனர். தலைவனின் வருகையால் மட்டுமே மகிழக்கூடிய நிலையில் இருந்தனர் என்பது மேற்கண்ட கூற்றுகள் வழி புலனாகிறது.

**பார்வை நுல்கள்:**


நற்றிணை (நா இராமையாபிள்ளை உரை) அறிஞர் அண்ணா நுற்பதிப்புக்கழகம்

அகநாநூறு – (நா. இராமையாபிள்ளை உரை) அறிஞர் அண்ணா நூற்பதிப்புக்கழகம்

குறுந்தொகை – (இரா பிரேம உரை) அறிஞர் அண்ணா நூற்பதிப்புக்கழகம்

கலித்தொகை – (புலியூர் கேசிகன் உரை) சைவ சித்தாந்த நுற்பதிப்புக்கழகம்

# சிறுபஞ்சமூலம் உணர்த்தும் இல்லாளின் மாண்புகள்

***தோ.எழிலரசி,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, சி.டி.டி.இ. மகளிர் கல்லூரி, சென்னை - 11.

அற இலக்கியங்கள் அனைத்தும் தனி மனித ஒழுக்கத்தையும் இல்லறத்தின் பெருமைகளையும் சிறப்பாக எடுத்துரைக்கின்றன. சமுதாயம் என்பது குடும்ப உறவுகளால் கட்டப்பட்டதாகும். அதில் பெண்ணின் பங்களிப்பு இன்றியமையாததாக விளங்குகிறது. பெண்ணின் கடமைகளாக இருக்க வேண்டியவைப் பற்றி அறநூல்கள் எடுத்துரைக்கின்றன. அவற்றைத் தெளிவுபடுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

'திருமணம்' பெண்ணிற்குப் புதிய உறவுகளையும் மதிப்புகளையும் நிலைகளையும் அளிக்கிறது. அதனால் அவளிடமிருந்து பல நல்ல செயல்களைச் சமுதாயம் எதிர்ப்பார்க்கிறது. 'இல்லாள்' எனும் சொல் திருமணமான பெண்ணிற்கு வழங்கப்படுகிறது. இல்லத்திற்குரியவர் என்ற பண்பை உணர்த்தும் இந்தச் சொல்லிற்கு நேரடியான ஆண்பால் சொல்லே இல்லாத நிலையிலிருந்து பெண்ணின் பொறுப்புணர்வு இல்லத்திற்கு எவ்வளவு முக்கியமானது என்பது உண்மையாகிறது.

இல்லறத்தில் வாழும் பெண்ணிற்குக் குடும்பத்தைப் பேணி காக்கும் உயர்ந்த கடமைகள் இருக்க வேண்டும் என்பதை இலக்கியங்கள் உணர்த்துகின்றன.

மனையாள் - இல்லுக்குரியவள் - இல்லை ஆள்பவள்

இல்லில் அறத் தொண்டு செய்பவள் - அறிவால்

இல்லினைக் கண்டு அன்பால் தொண்டு செய்பவள்.

என்று இல்லறத்தை ஆற்றும் பெண்ணிற்குரிய கடமைகளாகத் திரு.வி.கல்யாண சுந்தரனார் தனது தமிழ்த் தென்றலும் பெண்மையும் எனும் நூலின் வழி உணர்த்துகிறார்.

சிறந்த மனையாளே அழகு

ஆண்களை ஈர்க்கும் இழிகுணம் இல்லாத ஒழுக்க நெறியில் வாழும் மனைவியின் அழகே சிறந்தது என்பதை அற இலக்கியங்கள் வலியுறுத்துகின்றன. மனதாலும் பிற ஆடவரை நினைத்துப் பார்த்தல் கூடாது எனக் குறிப்பிடுகின்றன.

உறவினரைப் போற்றியும் அடக்கத்தைக் கடைப்பிடிப்பவளாகவும் பெருமை மிக்க செயல்களைச் செய்பவளாகவும், நாணத்தால் உண்டாகும் ஒடுக்கமும் என்ற இந்தப் பண்புகள் அனைத்தும் பெற்றவளாக ஒரு பெண் இருப்பினும் அவள் கணவனுக்கு உகந்தவளாக இருத்தலே நன்று என்பதைப்

பேண் அடக்கம் பேணாப் பெருந்தகைமை பூடுடைமை

நாண் ஒடுக்கம் என்றைந்தும் நண்ணின்றாய் பூணொடுக்கம்

பொன்வரைகோங் கோ்முலை பூந்திருவே யாயினும்

தன் வளரத் தாழ்த்தல் அரிது (சிறு பஞ்ச மூலம் பா - 45)

என்றுரைக்கிறது சிறுபஞ்சமூலம். திருமணம் செய்து புகுந்த வீட்டிற்குச் செல்லும்

தனது குடும்பமாக நினைத்து வாழ வேண்டும். புகுந்த வீட்டினரின் மேல் உண்மையான அன்புடையவளாக விளங்க வேண்டும் என்ற கருத்தைத் தெளிவு படுத்துகின்றன.

இல்லறக் கடமைகள் :

குடும்ப வாழ்வில் சிறப்புடன் வாழ வேண்டுமானால் திருமணமான பெண்ணின் பங்கு போற்றுதற்குரியதாக அமைதல் வேண்டும். இல்லறம் செய்யும் பெண்ணுக்குரிய இன்றியமையாதக் கடமைகளாக அற இலக்கியங்கள் பல கருத்துக்களைக் கூறுகின்றன. தான் ஈன்ற குழந்தையைத் தானே பாதுகாத்து வளர்த்தல், தான் கொண்ட கருப்பத்தைப் பாதுகாத்தல், வளர்ப்பாரில்லாத குழந்தையைக் கண்டெடுத்து வளர்த்தல், கர்ப்பவதியையும் மிகவும் அழிந்தவளையும் தன்னுடன் வைத்து பாதுகாத்தல் ஆகிய இவைகள் இல்லறப் பெண்ணுக்குரிய கடமைகள் எனச் சிறுபஞ்சமூலம் (பா-72) உணர்த்துகிறது.

சமுதாயத்தில் தற்போது வேலைக்குச் செல்லும் பெண்கள் குழந்தையைப் பராமரிக்க இயலாத நிலையிலும் வீட்டைக் கவனிக்க முடியாத சூழலிலும் உற்றார், உறவினர்களையே சந்திக்க இயலாத நிலையிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவ்வாறு வாழ்வது சிறப்பற்ற வாழ்க்கை என்பதை அற இலக்கியங்கள் தெளிவுறுத்துகின்றன.

ஆண், பெண் என்ற இருவரும் அன்பு கொண்ட உள்ளத்துடன் திருமணம் என்ற உரிமையுடன் உயர் பண்புகளுடன் வாழ்வதையே கற்பு என்று அற நூல்கள் வலியுறுத்துகின்றன.

மேலும் கணவனின் வருவாய்க்கு ஏற்ப செலவு செய்து வாழ்தல், சுற்றத்தினர் பயந்து ஒதுங்காமல் விரும்பும்படி தழுவிக் கொள்ளுதல், விருந்தோம்பல், செல்வத்தைத் தருகின்ற தெய்வத்தைத் தெளிவாக வழிபாடு செய்தல் ஆகிய இவ்வைந்து தொழில்களும் பெண்டிர்க்குச் சிறப்பினைத் தரும் என்பதை,

வருவாய்க்குத் தக்க வழக்கறிந்து சுற்றம்

வெருவாமை வீழ்ந்துவிருந் தோம்பித் - திருவாக்குத்

தெய்வத்தையும் எஞ்ஞான்றும் தேற்ற வழிபாடு

செய்வதே பெண்டிற் சிறப்பு (சிறுபஞ்சமூலம், பா-43)

என்ற சிறுபஞ்சமூலப் பாடல் வழியாக அறிந்து கொள்ள முடிகிறது. மேலும் திருமணமானப் பெண் கணவனுக்கு மருந்து போன்றவள் என்ற கருத்தினையும் பதிவு செய்கிறது. தன் அழகைக் காப்பதன் வாயிலாகவும், இன்சொல்லால் உபசரிப்பதன் மூலமாகவும், இனிய விருந்தோம்பலின் காரணமாகவும் ஒரு மனைவி தன் கணவனைத் தீய பழக்க வழக்கங்களில் இருந்து மீட்டு நோய் ஏதும் அண்டாது உறுதியாகக் காக்க முடியும் என்று எடுத்துரைக்கின்றது.

“மனைவி என்பவள் வெறும் இன்பத்திற்கு மட்டும் உரிய ஒருத்தி அல்லள். அவள் தாயுமானவள், கடவுளுமாவாள், எல்லாம் அவள் அவளிடத்தில் எல்லா இயல்புகளும் உள்ளன. இவை எல்லாம் சேர்ந்த ஒருத்தியே மனைவி” எனத் திரு.வி.க. பெண்ணின் பெருமைகள் குறித்து சிறப்பிக்கின்றார். ஒருவன் இல்வாழ்க்கையில் பெறுகின்ற இன்பமே இயற்கையான இன்பம். அதுவே நிலையான இன்பமும் ஆகும் என அற இலக்கியங்கள் இயம்புகின்றன.

சமூக அமைப்பினுள் முக்கியக் கூறாகத் திகழ்வது குடும்பம். இத்தகைய குடும்ப அமைப்பினுள் ஆண், பெண் இருவருக்குமான அறங்கள், பெண் கடைபிடிக்க வேண்டிய அறங்கள், ஆண் கடைபிடிக்க வேண்டிய அறங்கள் முதலான கருத்துக்கள் குறித்து அற இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.

சமுதாயத்தில் அறமாகக் கருதப்படும் இல்லறம் பெண்களின் வாழ்வில் முக்கியக் கூறாக மாறிவிட்டது. அவ்வாறு மனையினுள் இல்லறக் கடமையாற்றுவது பெண்ணின் உயர்ந்த பண்பாகப் போற்றப்பட்டது.

இல்லாத வாழ்வை மன நிறைவுடன் வாழ்ந்து மகிழ்வோடு இருப்பது ஆண் பெண் இருவரின் ஒழுக்க நெறிகளால் தான் சாத்தியமாகும் என்பதை அற இலக்கியங்கள் உணர்த்துகின்றன.

மனைவியானவள் ஒழுக்கத்தில் சிறந்தவளாக வாழ்ந்தால் நன்மைகளே கிடைக்கும். தவறி வாழ முற்படும் போது பல தீயவிளைவுகளைப் பெற்று வாழ்வின் இன்பங்களை அடைய முடியாத நிலை உருவாகும் என எச்சரிக்கும் நிலை அற இலங்கியங்களின் வழி காண முடிகிறது. எனவே மனிதனை நல்வழிபடுத்தி வாழ்வை செம்மையாக்குவதே அற நூல்களின் தலையாய நோக்கமாக அமைந்துள்ளன.

ஒருவனுக்குத் தாய் இறந்தால் மகனுக்கு நாவால் சுவைத்துண்ணும் நல்ல சுவையுள்ள உணவு இல்லாமல் போகும். தந்தை இறந்தால் படிப்பு இல்லாமல் போகும். உடன் பிறந்தவன் இறந்தால் தோள் வலிமை போய்விடும். ஆனால் மனைவி இறந்தால் மேற்கூறிய அனைத்துமே போய்விடும் என்பதை,

மாதா மரிக்கின் மகனாவின் நற்சுவைபோம்

தாதா வெனிற் கல்வி தானகலும் - ஓதினுடன்

வந்தோன் மரித்துவிடில் வாகுவலி போமனையேல்

அந்தோ இவையாவும் போம். (நீதிவெண்பா)

என்னும் பாடல், மனைவி இல்லாதவன் வாழ்க்கை இன்ப வாழ்க்கையாகாது என்பதை உணர்த்துகிறது.

மனிதன் வாழ்கின்ற வாழ்க்கை அறவழியில் அமையுமானால் அது போற்றுதற் குரியதாகிறது. அறவழியில் அமையாமல் இருந்தால் பலரின் தூற்றுதலுக்குரியதாகிறது. போற்றும்படியான வாழ்வை வாழவே அறநூலான சிறுபஞ்பமூலம் அறிவுறுத்துகிறது.

# சிலம்பால் உயர்ந்தவள் உயர்த்தப்பட்டவள்

***முனைவர் க.கீதா,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர், கிருஷ்ணசாமி மகளிர் அறிவியல் கலை மற்றும் மேலாண்மையியல் கல்லூரி, கடலூர்.

முத்தமிழ்க்காப்பியம், உரையிடையிட்ட பாட்டுடைச்செய்யுள், மூவேந்தர் காப்பியம் என்றெல்லாம் பேசப்படும் சிலப்பதிகாரம் பெண்ணிய உரிமைக்கும் குரலுக்கும் வித்திட்ட முதல் பிரதி என்று கூறின் அது மிகையாகாது.

மனித வாழ்வு என்பது மிகவும் இனிமையும், மகிழ்வும், விட்டுக்கொடுத்து வாழ்தலையும், பெற்றோரை மதித்தலும் இப்படி எண்ணற்ற நிலைப்பாடுகளை உள்ளடக்கியதே. இறைப்படைப்பில் உயிரினங்கள் பல இருப்பினும் மனித இனமே உயர்வும் சிறப்பையும் ஒருங்கே பெற்றது. அப்படி சிலம்பாள் உயர்ந்தவளும் மக்களின் மனங்களால் உயர்த்தப்பட்டவளும் கண்ணகியும் மாதவியும் ஆவார்கள். சிலம்பால் பல்வேறு இடங்களில் இருவரும் உயர்ந்தே காணப்படுகிறார்கள். அவ்வகையில் கண்ணகியின் பாத்திரப்பாங்கினை மட்டும் இக்கட்டுரையில் காண்போம்.

**கண்ணகி பெயர் காரணம்**

வரலாற்றில் கண்ணகி எனும் பெயரில் இருவர் இருந்தார்கள் என்று கூறுகிறார்கள்.

அவை

1. கோவலன் மனைவி கண்ணகி
2. பேகன் மனைவி கண்ணகி

என்று இரண்டு பெண்கள் காணப்படுகின்றனர்.

'கள்' போல் மயக்கும் சிரிப்பை உடையவள் என்னும் பொருள் விளங்கும்படி கண்ணகி என்றனர். கண் + நகி என்று பிரித்து சிரிக்கின்ற மலர்ந்த கண்ணணைக் கொண்டவள் என்றும் பொருள் காண்பர்.

**கண்ணகியின் கற்பு**

பிறந்த வீடு செல்வச் செழிப்புடையதாக இருப்பினும் புதுந்த வீடு வாழ்வையே பெரிதென்று நினைப்பவர்களே மகளிர். அவ்வகையில் நம் கற்புக்கரசியான கண்ணகியும் திகழ்கிறாள். கணவனுடன் வாழும் வாழ்வில் வறுமை ஏற்பட்டாலும் வளம் பொருந்திய தந்தையரை நோக்கிச் செல்லாதவள்.

சங்க இலக்கியத்தில் செல்வம் நிறைந்த வளமான வாழ்வில் தன் மகள் வளர்ந்த வளர்ச்சியையும் இப்போது வறுமையிலும் மன நிறைவோடு தன் தலைவனோடு இல்லறம் நடத்தலை வியந்து பார்க்கின்றாள் செவிலித்தாய். இதனை நற்றிணை பாடல் பின்வருமாறு கூறுகிறது.

***"பிரசம் கலந்த வெண்சுவைத் தீம்பல்***
***விரிகதிர்ப் பொன்கலந்து உருகை தீம்பால்***
***பொழுதுமறத்து உண்ணும் சிறுமது கையேள்"***

கணவனின் வருமானத்திற்குத் தக்கவாறு வாழ்க்கை நடத்துவது தான் மகளிரின் இல்லற வாழ்விற்கு பெருமை என்பதை உணர்த்துகின்ற இப்பாடல் வரிகளைப் போல் கோவலனுடன் வாழ்கின்றாள்.

**சிலம்பு காட்டும் கற்பின் வகை**

சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் கற்பு நிலையை இருபிரிவுக்குள் நோக்கலாம். அவை,

1. ஆறியகற்பு
2. சீறியகற்பு

கோவலன் தன் அன்பு மனைவியை

*“மாசறு பொன்னே! வலம்புரி முத்தே!*

*காசறு விரையே!கரும்பே!தேனே!*

*அரும்பெறல் பாவாய் ஆருயிர் மருந்தே!*

*மலையிடைப் பிறவா மணியே!*

*அலையிடைப் பிறவா அமிழ்தே!”*

என்றெல்லாம் தம் நலனை பாராட்டிய அக்கணவன் ஆடல் நங்கையின் பின் (மாதவி) அவள் அழகில் மயங்கி தன்னை மறந்த காலத்திலும் எந்தப் பெண்ணாலும் பொறுத்துக் கொள்ள முடியாத துயரத்தையும் துரோகத்தினையும் பொறுத்துக் கொண்டு ஒரு தனி மரமாய் நின்ற கற்பினை **‘ஆறிய கற்பு’** என்றும்,

எந்த குற்றமும் செய்யாத தன் கணவன் கொலையுண்ட நிகழ்வினை கேள்வியுற்றயுடன் தன் மனம் சிறிதும் பொறுத்துக் கொள்ளாமல் பொங்கி எழுந்து பெண் வர்கத்திற்கே எடுத்துக்காட்டாய் எழுந்து நின்ற அக்கற்பு நிலையினை **‘சீறியகற்பு’** என்றும் வகைப்படுத்துகின்றனர் சான்றோர்கள்.

**கண்ணகி உயருமிடம்**

கோவலன் செய்த துரோகம் ஒரு வகையில் இருப்பினும் அவற்றை ஒருபோதும் வெளியில் காட்டிக்கொள்ளாமல் கோவலன் பொருட்கள் அனைத்தையும் இழந்து வந்தபோது,

*“நலங்கேழ் முறுவல் நகைமுகம் காட்டிச்*

*சிலம்புள கொண்மெனச் சேயிழை கேள்இச்*

*சிலம்பு முதலாகச் சென்ற கலனோடு*

*உலர்ந்தபொருள் ஈட்டுதல் உற்றேன் மலர்ந்தசீர்” (புகார்காண்டம்)*

என்று தன் கால் சிலம்பினை கழற்றி கொடுத்தாள். அங்கே அவனை மன்னிக்கும் மகாத்மாவாக உயர்கின்றாள். இவை மட்டுமல்ல கோவலன் கள்வன் என்று குற்றம் சாட்டப்பட்டு கொலையுண்டதை கேட்டவுடன்,

*“பொங்கி எழுந்தாள் விழுந்தாள் பொழிகதிர்த்*

*திங்கள் முகிலோடும் சேணிலம் கொண்டெனச்*

*செங்கண் சிவப்ப அழுதாள் தன் கள்வனை*

*எங்கனா என்னா இனைந்தேங்கி மாழ்கினாள்”*

என்று கணவனை இழந்ததைக் கூட பொறுத்துக் கொள்வாள். ஆனால் அவன் கள்வன் என்பதை அவளால் பொறுத்துக் கொள்ளவே முடியாத நிலையில் பொங்கி எழுந்து போராடும் குணத்தால் அவள் மேலும் உயர்த்தப்படுகின்றாள் இளங்கோவடிகளால்.

**பத்தினிப்பெண்**

முதற்பகுதியில் பொறுமையின் பொக்கிஷமாய் இருந்தவள், இரண்டாம் பகுதியில் பொங்கி எழுகின்றாள். மூன்றாம் பகுதியில் தெய்வமாய் போற்றப்படுகின்றாள். அவளின் சிறந்த ஒழுக்கத்தினாலும் மற்றும் கற்பின் இலக்கணமாகவும் இன்று வரை உலகளவில் போற்றப்படுவதோடு பெண் வர்க்கமே தெய்வமாக நினைக்கும் அளவிற்கு போற்றப்பட்டு வருகின்றாள்.

இக்கட்டான சூழ்நிலையில் பெண் எப்படி இருக்க வேண்டும் என்பதை சிலப்பதிகார கதையில் கண்ணகி கதாப்பாத்திரத்தை உற்று நோக்கினால் போதும். உதாரணமாக தன் கணவன் தன்னைவிட்டு பிரிந்துசென்று வேறு ஒரு பெண்ணுடன் இருப்பதை தெரிந்தும் பொறுமையோடு அவள் கையாளும் திறத்தினை இக்காலப் பெண்கள் உற்று நோக்க வேண்டும்.

**தெய்வம் போற்றிய கண்ணகி**

தாமரை போன்ற சிற்றடிகள் வருந்த மிகவும் துன்புற்றுத் தன் கணவனுடன் தங்கியிருந்தாள். தெய்வம் ஏறப் பெற்ற சாலினி அக்கொற்றவையைத் துதித்துப் பின் கண்ணகியை நோக்கிப் புகழ்ந்தாள்.

***"கணவனோடு இருந்த மணமலி கூந்தலை***

***இவளோ கொங்கச் சொல்லி குடமலையாட்டி***

***தென்தமிழப் பாவை செய்தவக் கொழுந்து***

***ஒருமா மணியாய் உலகிற்கு ஓங்கிய***

***திருமா மணி எனத் தெய்வமுற்று உரைப்ப"***

அதாவது கண்ணகியோ கொங்கு நாட்டின் விலை மதிப்பற்ற செல்வி குடமலை நாட்டை ஆள்பவள், தென் தமிழ்ப்பாவை, மேலோர் செய்த தவக்கொழுந்து, ஈவ்வுலகிற்கெல்லாம் ஒப்பற்ற மாமணி போன்று மிக்க ஒளியைத் தரும் தெய்வ மகள்! என்று மெய்மறந்து சாலினி போற்றித் துதித்தாள்.

**கண்ணகியின் வரம்**

அரிய சிறையினின்று விடுவிக்கப்பட்ட கனகவிசயர் முதலான ஆரிய அரசரும், வஞ்சி மாநகரப்பெருஞ்சிறையில் கிடந்த பிறரும், குடகு நாட்டு மன்னன், மாளுவ நாட்டு மன்னன், இலங்கை கயவாகு மன்னன் ஆகியோர் கண்ணகி தெய்வத்தைத் தொழுது போற்றினர்.

***"இமயமலையை எல்லையாகக் கொண்ட இந்தச் சேரர் பெருமான் நினக்கு இந்நாளில் நிகழ்த்திய விழாவில் நீ எழுந்தருளியதைப் போல எங்கள் நாட்டில் நாங்களும் உனக்கு அமைக்கவிருக்கும் திருக்கோயில் விழாவிலும் எழுந்தருள்வாயாக"***

என வேண்டிக் கேட்கின்றனர். அவ்வேளையில் **'அங்ஙனமே வரம் தந்தேன்'** என வானிலே ஒரு குரல் எழுந்தது. அக்குரல் ஒலி கேட்ட செங்குட்டுவனும் ஏனைய அரசர்களும்,

***"ஓங்கிருந் தானையும் முறையோடு ஏத்த***

***வீடுகண்டவர் போல் மெய்ந்நெறி விரும்பினர்"***

அப்படி கண்ணகி தெய்வத்தால் கொடுக்கப்பட்ட வரமே! இன்று தமிழ்நாடு மட்டுமின்றி உலக நாடுகள்தோறும் பல்வேறு பெயர்களில் கண்ணகி தெய்வமாக போற்றப்பட்டு வருகின்றாள்.

**அருந்தெய்வமும் இளங்கோவடிகளும்**

வானவர் மகளாகிய கண்ணகி தெய்வத்தின் தன்மைகளை விளக்கிய தகுதி மிக்க நன்மொழிகளை கேட்ட நல்லவர்களே! என்று இளங்கோவடிகள் இந்நூலின் இறுதியில் சில அறிவுரைகளை இக்காலத்திற்கு மட்டுமல்ல எக்காலத்திற்கும் பொருந்தும் கையில் எடுத்துக்கூறுகின்றார். அவை,

***" பரிவும் இடுக்கனும் பாங்குற நீங்குமின்***

***பொய்யுரை அஞ்சுமின் புறஞ்சொல் போற்றுமின்***

***இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா***

***உளநாள் வரையாது ஒல்லுவ தொழியாது***

***செல்லும் தேஎத்துக் குறுதுணை தேடுமின்"***

என்கிறார்.

**முடிவுரை**

இன்றைய பெண்களுக்கு ஒரு மிகப் பெரிய உதாரணப்பெண் கண்ணகி. கணவன் மனைவிக்கிடையே நடைபெறும் சிறுசிறு பிரச்சனைகளுக்கெல்லாம் நீதி மன்றத்தினையும் விவாகரத்தையும் நாடும் பெண்களே! கண்ணகியை உற்று நோக்குங்கள். தன் கணவன் தன்னை மறந்து மாதவியை நாடியபொழுது எவ்வளவு பொறுமையாக இருந்தாள். அவளே இறுதியியல் தன் கணவனுக்காக எப்படி வாதாடினாள்? என்பதை கவனியுங்கள். பொறுமையும் வேண்டும் பொங்கி எழவும் வேண்டும் என்பதை இக்கட்டுரை நமக்கு கூறுவதோடு இளைய சமூகத்திற்கு எடுத்துக்காட்டாகவும் இருக்கும் என்பதே திண்ணம்.

# பெரியபுராணத்தில் பெண்கள்

*ஏ.ராஜசசிகுமார், முனைவர்பட்ட பகுதிநேர ஆய்வாளர், தமிழாய்வுத்துறை, ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிநாதசுவாமிகள் கலைக் கல்லூரி, திருப்பனந்தாள் - 612 504.

தமிழ் இலக்கியங்கள் பல்வேறு பொருண்மைகளைக் கொண்டு விளங்குகின்றன. இப்பொருண்மைகள் 1.பொது, 2.சிறப்பு என இருதிறமாக நின்று மக்கட் சமுதாயத்திற்குப் பயன் காட்டுகின்றன.

பொது நிலையென்பது மக்கட் சமுதாயத்தின் வாழ்வு வளம் பெறுவதற்கு உரிய நீதிகளை வேறுபாடின்றி எடுத்துரைத்தல ஆகும்.

சிறப்பு நிலையென்பது மக்கட் சமுதாயத்தின் வாழ்வு வளம்பெற சமய வழியில் நின்று, சமயக்கொள்கைகளை எடுத்துரைத்தலாகும்.

சமயநெறியில் நின்று சமுதாய மக்களுக்கு, சமயநெறிகளையும் உயிரிரக்கச் சிந்தனையும் எடுத்துரைக்கும் நிலையில் பெண்களின் பங்கு பலவாறாக இலக்கியங்களில் காணக்கிடக்கின்றன.

பெண்கள் சமய வழியில் நின்று சமுதாயத்தினைப் பேணிய தன்மை பெரியபுராணத்தில் பெண்கள் என்ற தலைப்பின் கீழ் கட்டுரை பருந்தின் வீழ்வெனக் காட்டுகின்றது.

பெரியபுராணத்தில் சேக்கிழாரால் எடுத்துக்காட்டப்பெறும் பெண்கள்,

1. முதன்மை நிலை ( அடியவர் )
2. துணைநிலை
3. பெயர்அறியப்படாதவர்

என்ற முத்திற நிலையில் இக்கட்டுரையில் வகை கொள்ளப்பெறுகின்றது.

**1. முதன்மை நிலை**

சைவ சமயக் கொள்கைகளைப் பின்பற்றி சமயத்திற்காகவும் சமுதாயத்திற்காகவும் வாழ்ந்து பேறு பெற்ற பெண்கள் முதன்மை நிலை என்ற பிரிவின் கீழ் கொள்ளப்படுகின்றனர். இந்நிலைக்குச் சான்றாக,

1. காரைக்காலம்மையார்
2. மங்கையர்க்கரசியார்

என்பவர்களின் வாழ்வியல் எடுத்துக்கொள்ளப்படுகின்றது.

**1. காரைக்காலம்மை**

பெரியபுராணத்தில் உள்ள பெண்ணடியார்களில் முதன்மையானவர் ஆவார். இவர் காரைக்கால் என்னும் ஊரில் தனதத்தன் என்பாருக்கு மகளாய்ப் பிறந்தவர். இவருக்குப் பெற்றோர் புனிதவதி எனப் பெயரிட்டனர். காரைக்கால் என்ற ஊரில் பிறந்து இறைவனடி அடைந்தமையால் காரைக்காலம்மை எனச் சுட்டியழைக்கின்றனர்.

காரைக்காலம்மை எனப்படும் புனிதவதியார் பிறந்து மொழி பயின்ற காலந்தொட்டு சிவனடியே சிந்தித்து வந்தித்து வரும் நியமமுடையவராய் விளங்கினார். பரமதத்தன் என்னும் வணிகனுக்கு மணமுடித்துக் கொடுத்தனர். இருவரும் காரைக்காலில் இல்லறம் நடத்திவந்தனர். ஒருநாள் சிவனடியார் ஒருவர் மிகுந்த பசியுடன் வந்தார். அவருக்கு புனிதவதியார் உணவளித்தார். இப்பண்பினை,

*வேதங்கள் மொழிந்தபிரான் மெய்த்தொண்டர் நிலைகண்டு*

*நாதன்தன் அடியாரைப் பசிதீர்ப்பேன் எனநண்ணிப்*
*பாதங்கள் விளக்கநீர் முன்னளித்துப் பரிசலம்வைத்து*
*ஏதந்தீர் நல்விருந்தா இன்அடிசில் ஊட்டுவார்*

என்ற பெரியபுராணப் பாடல் காட்டுகின்றது. இப்பாடலில் அடியாருக்கு உணவளித்தல் என்ற நிலையானது மாகேசுவர பூசை எனப்படும். சமயக் கொள்கையின் பாற்படும். சமுதாய நிலையில் உணவளித்தல் என்பது உயிரிரக்கச் சிந்தனை என்ற உணர்வின்பாற்படும்.

**2.மங்கையர்க்கரசியார்**

பாண்டி நாட்டினை ஆண்ட கூன்பாண்டியன் என்னும் மன்னனின் மனைவி மங்கையர்க் கரசியார் ஆவார். இவர் சோழநாட்டில் உள்ள பழையாரை என்ற ஊரில் பிறந்தவர் ஆவார். இவரின் இயற்பெயர் மானின்நேர்விழியாள் என்பதாகும். இப்பெயரை,

*மானினேர்விழி மாதராய்வழு திக்குமாபெருந் தேவிகேள்*
*பானல்வாயொரு பாலன் ஈங்கிவன் என்றுநீபரி வெய்திடேல்*
*ஆனைமாமலை யாதியாய இடங்களிற்பல அல்லலசேர்*
*ஈனர்கட் கெளி யேனலேன்திரு ஆலவாயரன் நிற்கவே*
*மங்கையரகர்கரசி வளவர்கோன் பாவை*
*வரிவளைக் கைம் மட மானி …     ……*

ஏன்ற தேவாரஅடிகளில் சம்பந்தர் பதிவு செய்துள்ளார். இப்பாடலில் மானி என்பது மானின் நேர்விழியாள் என்பதன் சுருக்கம் ஆகும்.

**2.துணைநிலை**

பெரியபுராணத்தில் நாயன்மார்களின் வாழ்வில் திருப்புமுனையாக அமைத்த பெண்கள் துணைநிலையில் கொள்ளப்படுகின்றனர். இந்நிலைக்குச் சான்றாக,

1. திலகவதியார்
2. பகவதியார்

என்பார்களின் வாழ்வு கொள்ளப்படுகின்றது.

**1.திலகவதியார்**

திருநாவுக்கரசன் தமக்கையார் ஆவார். இவருக்கு வினைவயத்தால் பெற்றோர் இறைவனடி சேர்ந்தனர், மணமகன் கலிப்பகையார் என்பவருக்கு மணம் பேசி உறுதிசெய்தபின், போரில் புகழுடம்பு பெற்றதன் பின் வேறுமணம் செய்து கொள்ளும் எண்ணமின்றி, உடன்பிறந்த தம்பி சமணசமயம் சார்ந்தார். மருள்நீக்கியார் சைவனாக வேண்டி திருவதிகைத் தலத்தில்,

*தம்பியார் உளராக வேண்டும் என வைத்ததயா*
*உம்பருல கணையவுறு நிலைவிலக்க உயிர்தாங்கி*
*அம்பொன்மணி நூல்தாங்கா தனைத்துயிர்க்கும் அருள்தாங்கி*
*இம்பர்மனைத் தவம்புரிந்து திலகவதி யாரிருந்தார்.*

ஏன்ற பெரிய புராணப்பாடல் காட்டுகின்றது.

**2.பகவதியார்**

பகவதியார், திருஞானசம்பந்தரின் தாயார் ஆவார். இவரின் கணவன்பெயர் சிவபாதஇருதயர் என்பதாகும். சிவபாத இருதயர் சைவசமயம் வாழவேண்டும் என்ற சிந்தையுடன் வாழ்ந்தார். கணவனின் கருத்தினோடு இசைந்த சிந்தையுடையவராய் திகழ்ந்தார்.

*பொற்புடைய பகவதியார் எனப்போற்றும் பெயருடையார்*
*கற்புமேம் படுசிறப்பால் கணவனார் கருத்தமைந்தார்*

என்ற பெரிய புராணப் பாடலடிகள் காட்டுகின்றன.

**3.பெயர் அறியப்படாதவர்**

பெரியபுராணத்தில் பெயர் அறியப்பாடதவர் பலர் உள்ளனர். இவர்களின் பண்புகளும் சமயக் கொள்கையைக் காட்டுவதாகவும், சமுதாய அறம் பேணும் நிலை வெளிப்படும் தன்மையில் உள்ளாகக் காணமுடிகின்றது.

**முடிவுரை**

பெரியபுராணத்தில் இடம்பெற்றுள்ள பெண்கள் சைவ சமயக்கொள்கைகளைப் பேணுதல், சமுதாயச்சிந்தனையுடன் வாழ்தல் ஆகிய நிலைகளைகளில் விளங்கிய தன்மை அறிய வருகின்றது.

# சங்க இலக்கிய நீா் நிலைகள்

*சே.சரத்குமார், முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர்.

**அறிமுகம்**

மக்கள் தங்களைச் சுற்றிலும் காணும் இயற்கைப் பொருள்களில் எண்ணற்ற தெய்வங்கள் உறைகிறதென நம்பினர். அவை மலை, காடு, மரம், நீர்நிலை, கழி, கடல் முதலியவற்றில் அவை இருப்பதாகக் கருதினர். மனித வரலாற்றில் சிறப்புமிக்க ஐம்பூதங்கள் அடங்கியுள்ளன. அவற்றுள் நிலத்தை அடுத்து வருவது நீராகும். இந்நீரானது உலகில் உயிரினங்கள் தோன்ற பெரும் பங்கு வகிக்கின்றன. இவ்வகையில் உலகில் முதல் உயிரினமான அமீபா தோன்றுவதற்கான மூலப் பொருளே நீராக அமைகின்றது. எனினும் ஓரறிவு முதல் ஐந்தறிவு வரை உள்ள உயிரினங்கள் தோன்றவும் நீர் ஒன்றே முதன்மையான காரணமாகும். மேலும் நீர் நிலைகள் சங்க இலக்கியத்தில் எவ்வாறு மனிதனிக்கும், உயிரினங்களுக்கும் பெரிதும் துணையாக நின்றன என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**தொல்காப்பியம் கூறும் நீர்நிலைகள்**

பழங்கால வரலாற்றை பிரதிபலிக்கக் கூடியதாக கருதும் சங்க இலக்கியத்தைவிட காலத்தால் முற்பட்ட நூல் என்று அறியப்பட்டது தொல்காப்பியமார் என்னும் இலக்கணநூலாகும். இந்நூலில் தொல்காப்பியர் நிலங்களை,

“நடுவன் ஐந்திணை நடுவணது ஒழியப்

படுதிரை வையம் பாத்திய பண்பே” (தொல்.அகம். 2)

என்று குறிப்பிடுகிறார். மேலும் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய அய்திணைகளும் பாலைத்திணை நீங்கலாக இவ்வுலகை பகுத்து கூறுகிறார். அவ்வாறு பகுக்கப்பட்ட நிலத்தில் அனைத்திற்கும் முதல்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகியவற்றையும் குறிப்பிடுகிறார்.

“தெய்வம் உணவே மாமரம் புள் பறை

செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ

அவ்வகை புறவும் கருவென மொழிப” (தொல்.அகம். 18)

என கருபொருள்களை வகைபடுத்திக் கூறுகின்றார்.

நீரானது முதல்பொருள், உரிப்பொருள் மற்றும் கருப்பொருள்களையும் தீர்மானிக்கும் நிலையை உடையதாக தொல்காப்பியர் பிரித்துள்ளார்.

**நீர் தோற்றம்**

வானத்தில் மேகக் கூட்டங்கள் அடர்த்தி அதிகமாகும் பொழுது ஒன்றுடன் ஒன்று உறாசும் பொழுதும் இடியும் மின்னலும் தோன்றி மழை பெய்கிறது. என்பதை

“நெடு வான் மின்னி குறுந் துளி தலைஇ

படு மழை பொழிந்த பகுவாய்க் குன்றத்து” (நற். 347-1)

எனும் நற்றிணைப்பாடல் எடுத்துரைக்கிறது.

கடல்நீரை முகந்த மேகங்கள் வானில் செழிப்புடன் இருந்தாலும் முதலில் மழைப்பொழிவைத் தொடங்குவது குறிஞ்சி நிலத்திலே தான். இதனை, குறிஞ்சி நில பாடலொன்று மழை வருவதை பின்வரும் நிலைகளில் குறிப்பிடுகின்றது.

“கார் கதம்பட்ட கண் அகண் விசும்பின்

விடுபொறி நெகிழியின் கொடிபட மின்னி

படுமழை பொழிந்த பானாட் கங்குல்” (அகம். 108:6-8)

எனும் பாடலடிகளில் இரவில் மிக்க மழையை பொழிந்தது என்று குறிப்பிடுகிறது. இப்படி உருவாகும் மழை ஆறுகளில் பாய்ந்தும் மற்றும் ஒரு பகுதி நிலத்திற்குள் ஊடுருவி பல வழிகளின் மூலமாக கடலைச் சென்று சேரும் என்பதை,

"வான் முகந்த நீர் மலைப் பொழியவும்

மலைப் பொழிந்த நீர் கடல் பரப்பவும்

மாரி பெய்யும் பருவம் போல" (பட்டின. 126-128)

எனக் கடலில் தாம் நுகர்ந்த நீரை பொழிவதற்காகவும் மலையில் சொழிந்த நீரை மீண்டும் கடலில் சேர்ப்பதற்காகவும் மேகங்கள் மழைகாலத்தில் இடையறாது செய்யும் தொழில் என்று பட்டினப்பாலை வரிகள் குறிப்பிடுகின்றன.

**நீரின் தேவைகள்**

உலகில் உள்ள அனைத்து உயிர்களும் இன்றளவும் வாழ்வதற்கான ஆதாரமாக உள்ளது நீர். அந்த நீர் இல்லை என்றால் இவ்வுலகமே அழிந்துவிடும் என்று கருத்துக்கள் இன்றளவும் நிகழ்கின்றன.

"நீரின்றி மை உலகம் போல" (நற். 1-6)

எனும் நற்றிணைப் பாடல் வரிகள் நீர் இல்லையென்றால் இவ்வுலகில் எந்த உயிரினமும், எப்பொருளும் நிலைபெறாது என்பதை கூறுகின்றது.

இவ்வுலகில் நீர் எப்படி கிடைக்கிறது என்று ஆராயும் பொழுது அது இயற்கையளிக்கும் வரமாக கருதப்படும். மழையால் மட்டுமே உலகில் உள்ள அணைத்து உயிரினங்களுக்கும் தேவையான நீரை அளிக்க முடியும் என்பதையறிய முடிகின்றன. இதனை,

"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பாக்குத்

துப்பாய தூவும் மழை" (குறள். 12)

என்று வள்ளுவர் உலகில் வாழும் அனைத்து உயிரினங்களும் தனக்கு தேவையான பலவிதமான உணவுகளை உயிர்பித்துக் கொள்ளவும் தாகத்தை தனிக்கும் நீராக இருப்பது மழையாகும் என்று கூறுகின்றார்.

**நீர் நிலைகளின் வகைகள்**

உலகம் இன்றளவும் அழியாமல் இருக்க காரணமாக விளங்குவது நீர். அந்த நீர் நிலைகளின் பல்வேறு பெயர்களை உரிச்சொல் நிகண்டு குறிப்பிடுகின்றது.

"இலஞ்சி கயங்கேணி கோட்டாக மேரி

மலங்கன் மடுவோடை வாவி – சலந்தரம்

வட்டத் தடாக நளினி மருப்பொய்கை

குட்டங் கிடங்கு குளம்" (உரிச்சொல் நிகண்டு, நூ.எ. 21)

இலஞ்சி, கயம், கேணி, கோட்டகம், ஏரி, மலங்கல், மடு, ஓடை, வாவி, சலந்தரம், வட்டம், நளினி, மடு, பொய்கை, குட்டம், கிடங்கு, குளம் என்று பல பல நிலைகளாக வகைபடுத்தி கூறுகின்றன.

**இயற்கை நிர்நிலைகள்**

மனிதனின் முயற்சியால் உருவாக்கப்படாமல் இயல்பாகவே உருவான நிர் ஆதாரங்கள் இயற்கை நிர்நிலைகள் என்று கூறுகின்றனர். அவற்றுள்

1. சுனை, 2. அருவி, 3. காட்டாறு ஆகியவை இயற்கை நீர்நிலைகள் சார்ந்தவையாகும்.

**சுனை நீர்கள்**

மலையின்மீது இருக்கும் குறிஞ்சி நிலத்தின் இயற்கை நீர்நிலைகளை சுனைநீர் என்பர். சுனை என்பதற்கு மழையூற்று என்ற மெய்யப்பன் தமிழ் அகராதி பொருள் கூறுகின்றது இதனை.

"மல்லல் அறைய மயிர்சுனை" (அகம். 308-11)

என்பது செழிமையான பாறையின் மீது அமர்ந்துள்ள தெளிந்த நீரினுடைய சுனை என்பதன் வழி பாறையின் மீது அமர்ந்துள்ளது புலப்படுகிறது.

**அருவி எனும் நீர்நிலைகள்**

அருவி என்பது குறிஞ்சி நிலத்தின் மற்றொரு இயற்கை நீர்நிலை ஆகும். மலையில் இருந்து மிதந்து விழும் நீர்தொடரே அருவி என்பர். இதனை அருவியின் தமிழ்ச்சொல் "மலையின் வீழாறு" என்று பொருள் கூறுகின்றது.

"கழைநரல் வியல்அகம் வெம்ப மழைமறைந்து

அருவி ஆன்ற வெருவகு நனந்தலை" (அகம். 241:7-8)

எனும் அகநானூறு பாடல் மழை வராததால் அருவிகள் இல்லாமல் போனது என்று குறிப்பிடுகிறது. இதன் மூலம் அருவி உருவாகுவதற்கு மழை முக்கிய ஆதாரம் என்பது அறியப்படுகிறது.

**கல்லுடைப்படு**

குளம் போன்ற நீா்நிலைகள் படு என்று கூறுவா். படு எனும் நீா்நிலைகள் பாலை நிலத்தை சாா்ந்தவையாகும். பாலை நிலத்தில் நீா் இல்லாமல் வறண்டு கிடக்கும்பொழுது பாலை நிலத்தில் இருக்கும் ஆறலைக்கள்வா்கள் "படு" எனும் இந்நீரினை மட்டும் அருந்திவந்தனா் என்பதை நற்றிணைப்பாடல் கூறுகிறது.

"கல்லுடைப் படுவில் கலுமி தந்து
நிறை செயல் அறியாக் குறைத்து ஊண் அல்லில்
துவா்செய் ஆடைச் செந்தொடை மறவா்
அதா் பாா்த்து அலகும் அஞ்சுவரு நெறியிடை" (நற். 33:4-7)

என நீா்நிலைகளின் தோற்றம் இப்பாடல் மூலம் அறியப்படுகிறது.

**ஊா் உண் கேணி**

கேணி என்பதற்கு கிணறு என்று தமிழ் அறிஞா்கள் கூறுகின்றனா். சங்க இலக்கியத்தில் "கேணி" முல்லை நில நிா்நிலைகளாக காட்டப்பட்டுள்ளது. கேணி என்பது ஆழமான கிணறு என்று அதன் பொருள் அமைகிறது. கேணி நீரைப் பாதுகாத்த முறை நீா் வீணாகிவிடாமல் அதனை பக்குவமாக பயன்படுத்திய நுட்பத்தை வரையறை செய்கின்றனா்.

"வறன்பொருந்து குன்றத்து உச்சிக் கவாஅன்
வேட்டச் சிறூா்அகன்கண் கேணிப்
பயநிறைக்கு எடுத்த மணிநீா்ப் பத்தா்
புண்தலை மடப்படி கன்றொடு ஆர
வில் கடிந்து ஊட்டினை பெயரும்" (நற். 95:5-8)

வறட்சியுடைய குன்றத்து உயரத்தில் ஒரு பக்கத்தே உள்ள வேட்டுவா் சிற்றூரை அடுத்த அகன்ற வாயையுடைய கிணறு என்று குறிப்பிடுகின்றனா்.

**அகழி**

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு இவற்றில் இடம்பெறும் நீா் நிலைகளில் அகழியும் ஒன்றாகும். அகழி என்பதன் பொருள் தமிழ் அகராதி கூறுவது "மதிசூழ்கிடங்கு" என்று கூறுகிறது. மன்னா்கள் தங்களுடைய பாதுகாப்பிற்கு அரண்மனையை சுற்றிலும் மதிலை அமைத்து அவற்றிற்கு அருகில் அகழிகளை அமைத்தனா் இவை செயற்கை நீா்நிலையாகும்.

"தேன் வண் சோழா் குடந்தைவாயில்
மாாி அம் கிடங்கின் ஈாியமலா்ந்த" (நற். 379:7-8)

சோழ மன்னா்களுக்குாிய குடவாயில் எனும் ஊாில் மழை பெய்ததால் அகழி நிலம்பிக் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மன்னா்கள் அகழி அமைக்கும்போதே மழை வந்தால் தேங்கும்படி வடிவமைத்து கட்டியுள்ளனா்.

**சங்ககாலத்தில் மழைநிரை நிலத்தடி நீராக்கல்**

சங்ககாலத்தில் மாட மாளிகைகள் என்று கூறுவா் இந்த மாடங்களில் மழை பெய்யும் பொழுது அந்த மழை நீரை அணைத்தும் சிதறி வீணாகாமல் ஓரிடத்தில் வந்து விழக் கூடிய வகையில் ஆங்காங்கே மழைநீா் குழாய்கள் அமைந்துள்ளனா் இதனை,

"நிலவுப் பயன் கொள்ளும் நெடுமண் முற்றது
இம்புாிப்பகுவாய் அம்பணம் நிறைய
கவிழ்ந்து வீழ் அருவிப் பாடுவிறந்து அயல" (நெடு. 95-97)

எனும் நெடுநெல்வாடை பாடல் மூலம் அறிய முடிகிறது. பிளந்த வாயினை உடையனவாய் மழைநீா் குழாய்கள் அமைக்கப்பட்டு இருக்கும். அவற்றில் இருந்து நீா் நிறைந்து கீழே விழும் ஓசை அருவி ஓசை போல் விளங்குகிறது. மழைநீா்குழாய்கள் மூலம் நீாினை ஒரே இடத்தில் சேமிக்க காரணம் அதனை குடிநீராய் சேமிப்பதே இதன் உத்தியாகும்.

**முடிவுரை**

உலகத்தில் நீரை அளிப்பது மழையாகும் நீாின் சுழற்சியின் மூலமாக மழை உருவாகுகின்றது என்பதை சங்ககால மக்கள் நன்கு உணா்ந்துள்ளனா். இதன் காரணமாக நீரினை சேமித்து வைக்க பல வழிகளை சங்ககால மக்கள் கையாண்டுள்ளனா். சூாிய வெப்பத்தால் கடல் நீா் ஆவியாக மேலே சென்று மேகத்தின் அடா்த்தி அதிகமான பின்பு குளிா்ந்து மழையாக பொழிந்ததை பற்றி சங்க இலக்கியத்தில் இடம்பெற்றிருந்ததை அறிய முடிகிறது. நீா் இன்றளவும் இயற்கைக்கும், உயிரினங்களுக்கும் ஓா் அங்கமாக திகழ்ந்து வந்துள்ளதைச் சங்கப் பாடல்களின் மூலம் அறியமுடிகிறது.

# சங்க இலக்கியங்களில் பெண்சார் தொழில்கள்

***க.சந்தியா,** முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகம், காந்திகிராமம், திண்டுக்கல்.

**முன்னுரை**

ஒவ்வொரு காலகட்டத்தைச் சேர்ந்த இலக்கியங்களும் அந்தந்தக் கால கட்டங்களில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கைமுறை, பொருளாதாரம், பழக்கவழக்கங்கள், தொழில்கள் ஆகியவற்றைப் படம் பிடித்துக்காட்டுகின்றன. காலங்காலமாக வினையே ஆடவர்க்குரியக் கடமையாகக் கூறப்பட்டு வருகின்றது. ஆனால் சங்க இலக்கியங்களில் பெண்கள் தாம் வாழ்ந்த நில இயல்புக்கு ஏற்றவாறு தொழில் செய்வதில் ஈடுபட்டுள்ளனர். குறிஞ்சி நிலத்தில் பெண்கள் முக்கிய விளைப் பொருளான தினையைக் காக்கும் தொழிலை மேற்கொண்டுள்ளனர். முல்லை நிலத்தில் மோர், தயிர், வெண்ணெய் கடைந்து எடுத்து விற்றல் போன்ற பணிகளில் ஈடுபட்டுள்ளனர். மருதநிலத்தில் களையெடுத்தல், நாற்றுநடுதல், நெல்லை அடித்துக்குவித்தல் போன்ற தொழில்களைச் செய்துள்ளனர். நெய்தல் நிலத்தில் தம் நிலத்தில் விளைந்த மீன், உப்பைப் பிற நிலங்களுக்குக் கொண்டு சென்று விற்றல், காயவைத்தல் போன்றவற்றை மேற்கொண்டுள்ளனர். பாலை நிலத்தில் வாழ்ந்த பெண்கள் நிலத்தைக் குத்திக் கிளறி புல்லரிசியைச் சேகரித்து வந்து உணவு சமைத்துள்ளனர். இவ்வாறு அந்தந்த நிலத்தில் வாழ்ந்த பெண்களும் ஆண்களைப் போல தம் வாழ்க்கைக்கும் தங்கள் குடும்பத்திற்கும் தேவையான பொருளை ஈட்டுவதில் முயற்சியும் உழைப்பும் கொண்டு செயல்பட்டுள்ளனர். இது மட்டுமல்லாது சங்க காலத்தில் வேறு பல தொழில்களும் செய்து வாழ்ந்துள்ளனர். அவ்வாறு பெண்கள் செய்த பிற தொழில்கள் எவை? அக்கால சமூகத்தில் அவர்கள் பெற்றிருந்த நிலை என்ன? போன்றவற்றை ஆராய்ந்து விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**பருத்திப் பெண்டிர்**

மக்கள் சமுதாயத்திற்கு உணவினை அடுத்து இன்றியமையாதது ஆடையாகும். அத்தகைய ஆடையை உருவாக்கும் நெசவுத்தொழிலுக்குத் தேவையான நூலை நூற்கும் தொழிலைப் பெண்கள் செய்துள்ளனர். நெசவுத் தொழிலுக்குப் பருத்தி மிகவும் தேவையான ஒரு மூலப்பொருள் எனலாம். அவ்வகையில் பருத்திப் பஞ்சிலிருந்து நூல் எடுக்கும் தொழிலில் கைந்தேர்ந்தவர்களாகப்பெண்கள்இருந்துள்ளனர். பருத்திப்பஞ்சை அதனுடைய கொட்டையிலிருந்து பிரித்தெடுக்க வில்லினைப் பயன்படுத்தியுள்ளனர். இதனை,

> **"வில்லெறி பஞ்சின் வெண்மழை தவழும்"** (அகம்:133:6)
>
> **"அழிதுளி பொழிந்த இன்குரல் எழிலி**
>
> **எஃகுறு பஞ்சிற்று ஆகி"** (நற்.247:3,4)

என்ற பாடல் அடிகளால் பஞ்சைப் பிரித்தெடுக்க வில்லினைப் பயன்படுத்தியிருப்பதை அறியமுடிகின்றது. "மகளிர் பருத்திப் பஞ்சினைக் கடைந்து செப்பஞ் செய்து நுண்ணிய நூலாக நூற்குந்தொழிலில் கைத்திறம் பெற்று விளங்கினார்கள்" என க.வெள்ளைவாரணனார் கூறுவதன்மூலம் பெண்கள் நூல்நூற்கும் தொழிலில் ஈடுபட்டிருந்தமையை நன்கு அறிந்துகொள்ளமுடிகின்றது.

**பூ விலை பெண்டிர்**

பெண்கள் மேற்கொண்ட தொழில்களில் பூக்கள் விற்பதும் முதன்மைத்தொழிலாக விளங்கியுள்ளது. பாதிரியின் வெண்மையான இதழுடைய புதிய மலர்களை தெருக்கள் தோறும் திரிந்து சென்று விலைகூறி விற்றுள்ளமையை,

> **“துய்த் தலைப்பாதிரி**
> **வால் இதழ் அலரி வண்டு பட ஏந்தி**
> **புது மலர் தெருவுதொறு நுவலும்**
> **நொதுமலாட்டிக்கு”** (நற்.118:8-11)

என்ற வரிகளால் அறியலாம். குருக்கத்தி, சிறுசண்பகமலர் போன்ற மலர்களை வட்டியில் வைத்து, கையிலெடுத்துக்கொண்டு விலைக்குக் கொள்ளீரோ என உழவரின் மகள் விற்றமையை நற்றினை 97-ஆவது பாடல் (5-9) வரிகள் சுட்டுகின்றது. மகளிர் மட்டுமல்லாது முதுபெண்டிரும் தின்பண்டங்களோடு, பூக்களையும் எடுத்துச் சென்று இல்லந்தோறும் விற்றுள்ளனர். இதனை,

> **“நன்னர் நலத்தர் தொல்முதுபெண்டிர்**
> **புடைஅமை பொலிந்த வகை அமை செப்பில்**
> **காமர் உருவின் தாம் வேண்டு பண்ணியம்**
> **கமழ் நறும் பூவொடு மனை மனை மறுக”** (மது. 409,421-423)

என்ற மதுரைக்காஞ்சி வரிகளால் அறியமுடிகின்றது. மேலும் மத்தளத்தின் கண் போன்ற பூந்தட்டிலே பூக்களையும் பலவகையாகக் கட்டப்பட்ட மாலைகளையும் விற்றனர்” என்பதை மு.சண்முகம்பிள்ளை தமது நூலில் குறிப்பிட்டிருப்பதும் நோக்கத்தக்கது. இவ்வாறு பெண்கள் மட்டுமல்லாது வயது முதிர்ந்த பெண்களும் தெருக்கள் தோறும் சென்று பூக்கள் விற்று வந்திருப்பதை அறியமுடிகின்றது. பூக்கள் விற்பதோடு அவர்கள் சூழ்நிலை அறிந்தும் செயல்பட்டுள்ளனர். இதனைப் புறநானூற்றுப்பாடல் (293:4-6) வரிகள் குறிப்பிடுகின்றது. அதாவது போருக்கு ஆடவர் கிளம்பிச் சென்று விட்டால் அங்கு உறையும் பெண்கள் பூச்சூடமாட்டார் எனக்கருதிப் பூ விற்கும் பெண் பிற மகளிர் இல்லங்களுக்குச் சென்றுள்ளாள் அது இரங்கத்தக்கது எனக்கூறுகின்றனர். பூ விற்கும் மகளிர் அவர்கள் கொண்டு செல்லும் பூக்கள் விற்றால் மட்டுமே நிம்மதி கிட்டும் இல்லையேல் அவர்களின் நிலை வருந்தந்தக்கதாக அமையும் என்பதை இப்பாடல் வழி வெளிப்படையாக அறிந்துகொள்ளமுடிகின்றது.

**அரியல் பெண்டிர்**

சங்க காலத்தில் மன்னன் முதல் மக்கள் வரை அனைவரிடமும் கள் அருந்தும் பழக்கம் இருந்து வந்துள்ளது. ஓவ்வொருவரும் அவரவர்க்குரிய வாழ்க்கைமுறைக்கேற்ப கள்ளைப் பருகியுள்ளனர். அவர்கள் உணவு உண்பதைப் போன்று கள் அருந்துவதும் முக்கிய இடம்பெற்றுள்ளது. அவ்வகையில் பெண்கள் கள்ளைக்காய்ச்சி விற்பதைத் தொழிலாகச் செய்திருக்கின்றனர். பல வகையான கள் இருப்பதாக இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. பூந்தேனைக் கொண்டு செய்தல், தென்னங்கள், பனங்கள், அரிசி போன்றவற்றைக் கொண்டு செய்யும் பல மது வகைகள் இருந்துள்ளன. அவற்றுள் குற்றாத கொழியல் அரிசியைக் களியாகத்துழாவிக் கூழைத்தயாரித்து, அதனை வாயகன்ற தட்டுப்பிழாவில் இட்டு உலர ஆற்றி, நெல்முனையை இடித்து அக்கூழிற் கலந்துள்ளனர். அக்கலவையை இரண்டு பகலும் இரண்டு இரவும் சாடியில் வைத்துள்ளனர். பின்பு வெந்நீரில் வேகவைத்து, நெய்யரியாலே வடிகட்டி விரலாலே அலைந்து பிழிந்துள்ளனர். இங்ஙனம் தயாரிக்கப்பட்ட கள்ளை ‘நறும்பிழி’ எனக்குறிப்பிடுகின்றனர். இவ்வாறு இனிமையான கள்ளைப் பெண்கள் செய்துள்ளனர் இதனை,

> **“ அவையா அரிசி அம்களித் துழவை**
> **முலா்வாய்ப் பிழாவில் புலர ஆற்றி**
> **பாம்புஉரை புற்றின் குரும்பி ஏய்க்கும்**
> **பூம்புற நல் அடை அளைஇ, தேம்பட**
> **வல்வாயச் சாடியின் வழைச்சு அற விளைந்த**
> **வெந்நீா் அரியல் விரல் அலை நறும்பிழி”** (பெரு.275-281)

என்ற வரிகளால் அறிந்து கொள்ள முடிகின்றது. இதனோடு பரதவ மகளிர் கள் காய்ச்சிய செய்தியும் சிறுபாணாற்றுப்படையில் (155-159) இடம்பெறுகின்றது. கடல் நீர் கொணர்ந்து வந்து ஒதுக்கிய விறகாலே தீயினை எரித்துக் காய்ச்சி அரித்த தேறல் எனக் குறிப்பிடுவர். கள்ளைக் காய்ச்சுவது மட்டுமல்லாமல் அதனை பிற இடங்களுக்குக் கொண்டு சென்று விற்றும் வந்துள்ளனர். கள் விற்கும் பெண்ணொருத்தி தன்னிடையில் பானையில் கள்ளைச் சுமந்து வந்து போர்வீரர்களுக்குக் கொடுத்திருக்கிறாள். இதனை அகநானூற்றுப்பாடல் (157:1-4) வரிகள் சுட்டுகின்றது. இவர்கள் கள்ளைக் கையால் அரிந்து எடுப்பதால் 'அரியல் பெண்டிர்' எனவும் குறிப்பிடப்படுகின்றனர். இதனை "கள்ளானது அரித்து எடுக்கப்படுவதால் அரியல் எனப்பட்டது. அதனைக்காய்ச்சி விற்கும் பெண்டிர் அரியல் பெண்டிர் எனப்பட்டனர்" என சசிவல்லி அவர்கள் தமது நூலில் குறிப்பிட்டிருப்பதும் நோக்கத்தக்கது. இதுமட்டுமல்லாது சங்ககாலத்தில் கள் காய்ச்சி விற்கப்படும் இடத்தில் கொடி நடப்பட்டு, இவ்விடத்தில் விற்கப்படுகிறது என்பதையும் குறித்துக்காட்டியுள்ளனர். இவ்வாறாக, உணவில் முக்கிய இடம் பெறும் கள்ளினைக்காய்ச்சி, விற்கும் தொழிலைப் பெண்கள் செய்துவந்திருப்பதை அறியமுடிகின்றது.

**அடுமகள்**

பண்டையக் காலத்தில் விருந்தோம்பல் செய்யும் பண்பு அனைத்து பெண்களிடமும் இருந்து வந்த ஒன்றாகும். அனைத்து விதமான அரிய பல உணவுகளையும் சமைத்து விருந்தோம்பல் செய்து மகிழ்ந்து வந்த பெண்கள் அதை ஒரு தொழிலாகவும் செய்து வந்திருக்கின்றனர் இதனை,

**"அடுமகள் முகந்த அளவா வெண்ணெல் … … … …**

**மூழ்ப்பப் பெய்த முழு அவிழ்ப் புழுக்கல்"** (புறம். 399:1-9

என்ற பாடல் அடிகளில் குறிப்பிடுகின்றது. சோறாக்கும் பெண் முகந்து கொணர்ந்த அளக்கப்படாத வெண்ணெல்லைக் குற்றி எடுத்த அரிசிக் கொண்டு ஆக்கிய சோற்றைக் காடிநீரப் பெய்த வெள்ளுலையிற் பெய்து கொண்டு, மாங்கனிகளைப் பிசைந்து செய்த புளிக்குழம்பும், கரிய பெரிய சுறாமீன். வரால்மீன் இறைச்சியும் வயல்களிற் படர்ந்த வள்ளைக்கீரையும் சிறுகொடியாகிய பாகற்காயும் பாதிரியின் முதிர்ந்த அரும்பினது இதழை விரித்தாற் போன்ற, தோலை நீக்கி இனமாகியவற்றோடு கலந்து மூடும்படியாகப் பெய்த முழுத்த சோற்றைச் செய்துள்ளாள். இப்பெண்டிரை இலக்கியம் 'அடுமகளிர்' எனப்பெயரிட்டுள்ளது. "உயிர் வாழ்க்கைக்கு ஆக்கந்தரும் சமையற்றொழில் அக்காலத்து 'அட்டில்தொழில்' என வழங்கப்பட்டது. .புலால்கலந்த உணவினை அமைத்தலும் புலால் கலவா உணவினை அமைத்தலும் எனச் சமையல்முறை இருவகையாகக்கொள்ளப்பட்டது" என்று க.வெள்ளைவாரணன் தமது நூலில் குறிப்பிடுகிறார். இதன்மூலம் சமைக்கும் கலையினை ஒரு தொழிலாகக் கொண்டு வாழ்ந்த மகளிரும் சங்க காலத்தில் இருந்துவந்துள்ளனர் என்பதை அறியமுடிகின்றது.

**குற்றேவல் மகளிர்**

ஏவல் பணி செய்யும் மகளிரும் சங்க காலத்தில் இருந்துள்ளனர். இம்மகளிர் அரசவையில் பணிபுரிந்துள்ளனர். வரும் விருந்தினருக்கு இன்முகத்துடன் பொன்னால் செய்த வட்டில் நிறையும்படி கள்ளினைப் பலமுறை வார்த்துத்தரும் பணியைச்செய்துள்ளனர். இதனை.

**"இழை அணி வனப்பின் இன்நகை மகளிர்**

**போக்கு இல் பொலங்கலம் நிரைய பல்கால்**

**வாக்குபு தரத்தர"** (பொரு.85-87)

**" இலங்கு இழை மகளிர் பொலங்கலத்து ஏந்திய**

**முணங்கமழ் தேறல் மடுப்ப நாளும்"** (மது.777,778)

என்ற பொருநராற்றுப்படை, மதுரைக்காஞ்சி வரிகளாலும் "பொன் செய் புனைகலத்தேந்தி நாளும் ஒண்தொடி மகளிர் மடுப்ப" என்ற புறநானூற்றுப்பாடலடிகளாலும் அறிந்து கொள்ளமுடிகின்றது. இம்மகளிர் குறித்து சசிவல்லி அவர்கள் "இம்மகளிர் அரசன்பால் வரும் விருந்தினரை அரசன் கருதியபடி உபசரிக்கும் பணிசெய்வர் இவர்கள் அன்பால் முகமலர்ந்து விருந்தினரை வரவேற்று உபசரிப்பர்" எனக்குறிப்பிட்டிருப்பதும் கவனிக்கத்தக்கது.

அரவவையில் மட்டுமின்றி, பாசறையிலும் வாளினைக் கச்சோடு சேர்த்துக்கட்டிய மகளிர் பாவை விளக்கில் நீண்ட திரியை இட்டு நெய் வார்க்கும் குழாயால் நெய் வார்த்து விளக்கேற்றும் பணயைச்செய்துள்ளனர். இதனை முல்லைப்பாட்டு, **"......... சிறுபுறத்து**

**இரவுபகல் செய்யும் திண்பிடி ஒள்வாள்**

**விரவுவரிக் கச்சின் பூண்ட மங்கையர்**

**நெய் உமிழ் சுரையர் நெடுந்திரிக் கொளீஇ**

**கை அமை விளக்கம் நந்துதொறும் மாட்ட"** (முல்.45-49)

என்ற வரிகளால் சுட்டுகின்றது. மேலும் "பெண்டிர் பாசறையில் வினை இயற்றவதும் உண்டு, போர்த் தலைவர்களுக்கு வேண்டியவற்றைச் செய்யும் பணிப்பெண்களாக இருந்தனர்.பாசறையில் இரவுப் பொழுது வருமுன்னர் விளக்கேற்றியுள்ளனர்" என சசிவல்லி தமது நூலில் குறிப்பிட்டிருப்பதும் ஏவல் பணி செய்பவர்களாகப் பெண்கள் இருந்துள்ளமையைத் தெளிவுபடுத்தும்.

**புலைத்தி**

சங்க கால மக்கள் துய்மையான ஆடை உடுத்தியுள்ளனர். அதற்குத்தூய்மையாக ஆடையை வெளுத்துக் கொடுத்துள்ளமையே காரணம். அவ்வகையில் ஆடை வெளுக்கும் தொழிலைப் பெண்கள் செய்துள்ளனர். இவர்களைப் 'புலைத்தி' என்ற பெயரால் அழைத்துள்ளனர். இவர்கள் ஊரிலுள்ள அனைவருடைய ஆடைகளையும் உவர்மண் கொண்டு அழுக்குப்போகத் துவைத்துக் கொடுத்துள்ளனர். விழாக்காலங்களில்கூட ஓய்வில்லாது துணி துவைக்கும் பணியை மேற்கொண்டுள்ளனர் இப்புலைத்தி குறித்தும் அவர்கள் துணி வெளுத்தசெய்தியையும்(நற்.90:1-4, கலி.72:13,14 அகம்.387:4-7, 34:11,12 குறுந்.30:1-4, புறம்.311:1,2) பல பாடல்கள் சுட்டுகின்றன. துணி துவைப்பது மட்டுமின்றி இப்புலைத்தி இயற்கையாகக் கிடைக்கும் பனையோலையைக் கொண்டு புட்டில் செய்து விற்கும் தொழிலையும் செய்துள்ளனர் இதனை கலித்தொகை117 ஆவது பாடல் சுட்டுகின்றது. சலவைத் தொழிலில் போதிய வருமானம் கிடைக்காத நிலையில் புட்டில் செய்து விற்றல் போன்ற பணிகளிலும் ஈடுபட்டிருப்பதை அறிந்துகொள்ளமுடிகின்றது.

**முடிவாக**

- ❖ சங்க காலத்தில் ஆண்கள் மட்டுமின்றி பெண்களும் பல தொழில்களில் ஈடுபட்டிருப்பதை அறிய முடிகின்றது. திணை சார்ந்த தொழில் மட்டுமல்லாது பிற தொழில்களான நூல் நூற்கும் தொழில், சலவைத் தொழில், சமையல் தொழில், கள் காயச்சுதல் விற்றல், பூ தொடுத்து விற்றல் என தங்களால் முயன்ற அனைத்துவிதமான பணிகளிலும் ஈடுபட்டு வாழ்வை நடத்தியுள்ளனர்.

- ❖ உவர்மண் எடுத்து துணி வெளுத்தல், பருத்தியிலிருந்து நூல் எடுத்தல், பனை ஓலைக் கொண்டு புட்டில் செய்தல், வயல்களில் பூத்திருக்கும் பூக்களை மாலையாக்கி விற்றல், பனங்கள், தென்னங்கள், அரிசி கொண்டு கள் காய்ச்சுதல் என அனைத்துத் தொழில்களையும் பெரும்பாலும் இயற்கையில் கிடைக்கக்கூடிய பொருட்களைக் கொண்டே செய்துவந்திருக்கின்றனர். இது இயற்கையோடு இயைந்த வாழ்வையே சங்க கால மக்கள் மேற்கொண்டனர் என்பதற்குச் சான்று பகர்வனவாய் அமைகின்றது.
- ❖ சங்க காலப்பெண்கள் சோம்பியிராது, தம்மால் முயன்ற பணியைச் செய்து உடல் உழைப்பில் ஈடுபட்டு வாழ்ந்திருக்கின்றனர் விழாக்களில் கூட பங்கேற்க முடியாத நிலையில் இரவு பகலாக உழைத்துள்ளனர். கைம்பெண்களும் பிறர் ஆதரவை நாடாது உழைத்துவாழ்ந்துள்ளனர்.

- ❖ தாமாக ஒரு தொழிலைச் செய்வதோடு குற்றேவல் பணி புரிந்தும் வாழ்க்கை நடத்தியுள்ளனர். இது பெண்களில் சிலர் சங்க கால சமூகத்தில் பெற்றிருந்த நிலையைச்சுட்டுகின்றது. வயது பெண்கள் முதல் வயது முதிர்ந்தபெண்கள் வரை உடல் உழைப்பில் ஈடுபட்டு வாழ்வதையே பெரிதும் விரும்பியுள்ளனர் என்பதும் தெளிவு.

# இரட்டைக்காப்பியங்களில் தெய்வமும் பெண்ணும்

***முனைவர் மு.சிவபைரவி,** உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமி நாத சுவாமிகள் கலைக் கல்லூரி, திருப்பனந்தாள் - 612 504.

ஐம்பெருங்காப்பியங்களுள் இரட்டைக் காப்பியங்கள் என்பன சிலப்பதிகாரமும், மணிமேகலையும் ஆகும். சிலப்பதிகாரத்தினை இயற்றியவர் இளங்கோவடிகள். இதில் கோவலன், கண்ணகி கதையை எடுத்துக்கூறுவதாகும். மணிகேலையை இயற்றியவர் சீத்தலைச் சாத்தனார். மாதவியின் மகள் மணிமேகலை வரலாற்றினை எடுத்துக்கூறுவதாகும். இக்கட்டுரையில் இரட்டைக்காப்பியங்களில் தெய்வமும் பெண்ணும் என்ற தலைப்பில் சில செய்திகள் காட்டப்படுகின்றன.

**சிலப்பதிகாரம்**

சிலப்பதிகாரத்தின் நூலாசிரியர் இதனை மூன்று காண்டங்களாக பிரித்துள்ளார். புகார் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் என்ற காண்டங்களையும் முப்பது காதைகளையும் கொண்டதாகும். சிலம்பினை மையமாகக் கொண்ட கதையாதலால் இதனை சிலப்பதிகாரம் என்ற பெயரும் உண்டு. தமிழில் தோன்றிய முதற்காப்பியம் என்ற பெயரும் இதற்கு வழங்கப்படுகிறது. இந்நூல் ஏனைய காப்பியங்கள் போன்று இல்லாமல் குடிமக்களையே தலைவனாகக் கொண்டு அமைந்தது இதனால் குடிமக்கள் காப்பியம் என்ற பெயரும் அழைக்கப்படுகிறது.

**மணிமேகலை**

மணிமேகலைக் காப்பியத்தை இயற்றியவர் சீத்தலைச் சாத்தனார் ஆவார். மணிமேகலைக் காப்பியம் முப்பது காதையில் இறுதி மூன்று காதைகள் பல சமூக உண்மைகளையும், பௌத்த மதப் மெய்ப் பொருளையும் எடுத்துரைக்கின்றன.

மணிமேகலைக் காப்பியத்தை மணிமேகலை என்றும், மணிமேகலைத்துறவு என்றும் இருவகையாக வழங்குவர். இந்நூல் தொடக்கம் முதல் இறுதி வரை மணிமேகலையின் துறவையே பொருளாகக் கொண்டு இயங்குகிறது.

**சிலப்பதிகாரத்தில் உள்ள தெய்வங்கள்**

சிலப்பதிகாரத்தில் மங்கல வாழ்த்துப் பாடல் இயற்கையை தெய்வமாகக் கொண்டு அமைந்துள்ளது.

திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்
ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றும்
மாமழை போற்றுதும் மாமழை போற்றும்

என்பது மங்கல வாழ்த்து பாடலடிகளாகும்.

**கொற்றவை வழிபாடு**

கொற்றவை வழிபாட்டுத் தொன்மையை தொல்காப்பியத்தில்,

கொற்றவை நிலையுளும் அத்திணை புறனே

என்றவாறு காணமுடிகின்றது.

கொற்றவை வழிபாடு சிலப்பதிகாரநூல் எழுந்த காலத்தில் நவசக்தி பரவிய காலம் என்றும் கூறப்படுகிறது. சக்தி, தெய்வம், கல்வி, வீரம், முதலியவற்றின் இருப்பிடம் என்றக் கோட்பாட்டின் அடிப்படையில் தோன்றியதே சக்தி வழிபாடு. சிலம்பில் வேட்டுவரிக் காதையில், சக்தி பாலை நில தெய்வமாகப் போற்றப்படுகின்றாள்,.

**குலதெய்வ வழிபாடு**

இக்காதையில் ஆயர் சேரியில் பல தீய நிமித்தங்கள் தோன்றவும் அதனால் தீமை நேரும் என்று அஞ்சிய மகளிர்கள் தம் குல தெய்வமான கண்ணனை வேண்டிக் குரவைக் கூத்து ஆடுகின்றனர்.

குடப்பால் உறைவா குவியிமில் ஏற்றின்
மடக்கணீர் சோரும் வருவதொன் றுண்டு
உறுநறு வெண்ணெய் உருகா உருகும்
மறிதெறிக்காடா வருவ தொன்றுண்டு
நான் முலை யாயம் நடுங்குபு நின்றிரங்கும்
மான்மணி வீழும் வருவ தொன்றுண்டு

என்ற பாடல் வரிகள் மூலம் உணர்த்துகின்றது.

**கண்ணகி**

கண்ணகி தன்னுடைய கணவனை கொன்ற மன்னனிடம் சென்று தனக்கும், தன்னுடைய கணவனுக்கும் நேர்ந்த துன்பங்களை எடுத்துக்கூறி நீதி கேட்பதாக அமைவதாகும். இதில் கண்ணகி தன்னுடைய கணவன் கள்வன் அல்லன் என்பதை,

ஆங்கு
குடையொடு கோல் விழா நின்று நடுங்கும்
குடைமணி இன்குரல் காண்பென்கான் எல்லா
திசையிரு நான்கும் அதிர்ந்திடும் அன்றிக்
கதிரை இருள் விழுங்கக் கான்பென்கான் எல்லா
விடுங்கொடி வில்லிர வெம்பகல் வீழும்
கடுங்கதிர் மீனிவை கான்பென்கான் எல்லா

என்னும் பாடல் வரிகள் விளக்குகின்றன. இதன் பின்பு கண்ணகி தன்னுடைய காற்சிலம்பை எடுத்து உடைத்துத் தன் கள்வன் அல்லன் என்பதை நிலைநாட்டுகிறாள். இதனைக் கண்ட மன்னன் தன் உயிரைக் கொடுத்து வளைந்த செங்கோலாட்சியை நிலை நிறுத்தினான் என்று கூறப்படுகிறது.

இதற்கு பிறகு கண்ணகி தன் கணவன் இறந்ததும் மதுரைதீக்கு இறையக்கினாள். கோவலன் இறந்த பதினான்காம் நாள் பகற்பொழுதில் சென்ற பின் அங்கு தெய்வ வடிவுடன் வந் கோவலனைக் கண்டு அவனுடன் வானவூர்தியேறிக் தேவர்கள் போன்றத் துறக்கம் அடைந்தனள் என்று கூறப்பெறுகிறது. மழைவாழ் மக்கள் குன்றக் குரவையாடுகின்றனர். குறவர் மக்கள் கண்ணகியை தெய்வமாகவே வழிபடுகின்றனர். பிறகு தேவ வடிவில் தோன்றிய கண்ணகி செங்குட்டுவனையும், பிறரையும் வாழ்த்துகின்றாள்.

**மணிமேகலையில் உள்ள தெய்வம்**

மணிமேகலா தெய்வம் புகார் நகரில் ஒரு பெண்ணைப் போல தோன்றி கூறப்படுகிறது. மாலை மதியம் மறுவுடன் மாசற விளங்குவது சான்றோரிடம் விளங்கித் தோன்றும் குற்றம் போல உள்ளது. பிறகு மணிபல்லவ தீவில் உதயகுமரனுக்கு மணிமேகலையின் மீது கொண்ட தீராத அன்பினால் ஏற்படும் விளைவுகளை கூறுகிறது. இதனை,

கோல்நிலை திரிந்திடிற் கோள்நிலை திரியும்
கோள்நிலை திரிந்திடிற் மாரிவறங்கூரும்
மாரிவறங் கூரின் மன்னுயி ரில்லை
மன்னுயி ரெல்லாம் மண்ணாள் வேந்தன்
தன்னுயி ரென்னுந் தகுதியின்றாகும்
தவத்திறம் பூண்டோன் தன்மேல் வைத்த
அவத்திறம் ஒழிகென்றவன் வயி னுரைத்தபின்

என்ற பாடல் வரிகள் விளக்குகின்றன. மணிமேகலையிடம் கொண்ட தீய விருப்பத்தை ஒழிப்பாயாக என்று மணிமேகலா தெய்வம் அறிவுரை கூறியது. பிறகு மணிமேகலா தெய்வம் உவவனத்திற்கு புகுந்தது பற்றி கூறப்பட்டுள்ளமையை அறியமுடிகிறது.

அதனடிப்படையில் அறவணடிகள் மணிமேகலையிடம் சோணாட்டில் இப்போது வறுமையில் வாடும் மக்களுக்கு உணவளிப்பாயாக என்று கூறி அமுதசுரபியை கொடுத்தது. ஆதன் மூலம் அனைவருக்கும் உணவலித்தால் பிறகு விஞ்சையின் மகளான காயசண்டிகை கொடுமையான பசியால் வாடினாள் இவளுடைய பசி துயற்றினைப் போக்கினாள். பின்னர் கச்சிமாநகருக்கு சென்று அங்குள்ள மக்களுக்கு உணவினை அளித்து பசி துயரை போக்கினாள். மக்கள் மணிமேகலை தெய்வமாக வழிபட்டனர். இதற்கு அடையாளமாக சோழன் மணிமேகலைக்காக வணங்குவதற்கு கோமுகி பொய்கையுடன் மணிபல்லவம் ஒன்றினை காஞ்சியில் அமைத்தான் என்பதையும் அறியமுடிகிறது.

# கற்புக்கோட்பாட்டில் பெண்ணியம்

*முனைவர் ச.சுபாஷ், உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, தமிழ்நாடு மத்தியப் பல்கலைக் கழகம், திருவாரூர் - 610005.

**முன்னுரை:**

கணவன், மனைவி இணைப்பை முறையுறுத்த எழுந்தவை கற்புக் கோட்பாடுகள். தமிழரின் கற்புக் கோட்பாடுகள் இயற்கைத் தன்மையுடையது. கற்பு என்ற இல்லறத்தினையே பண்டையத்தமிழர்கள் விரும்புவர். கற்பு வாழ்க்கையில் ஈதல், விருந்தோம்பல், இல்லறம் பேணுதல், பிரிவு, போன்றவற்றை உலக வாழ்க்கையின் பயனாகப் தமிழர்கள் போற்றினர். தமிழர்களின் கற்புக் கோட்பாட்டில் பெண்ணியச் சிந்தனைகள் படிந்துள்ளதை இக்கட்டுரை ஆராய்கிறது.

**கற்பு- சொல்பொருள் விளக்கம்:**

கற்பு என்ற சொல் இலக்கண இலக்கிய நூல்களில் பயின்று வந்துள்ள முறையினை வைத்து இராம.சண்முகம் அவர்கள்

1. தலைவன் மீது தலைவி கொள்ளும் அன்பு
2. தலைவியின் மனம் திறம்பா அறம்
3. திருமணச் சடங்காகிய கரணம்
4. திருமணச் சடங்கின் மூலம் தலைவி பெற்ற மனை உரிமை
5. தலைவனுக்கும் தலைவிக்கும் சான்றோர் கற்பிக்கின்ற அறிவுரைகள்
6. மக்கட்பேறு, விருந்தோம்பல், கணவனின் பிரிவை ஆற்றியிருத்தல்
7. தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தை மறுத்து (திருத்தி) குடும்பம் என்னும் கட்டுக்கோப்புக் கலையாமல் நிலைக்கச் செய்யும் பொறுப்பு" என்னும் ஏழு பொருள்களில் தமிழ் நூற்கள் வழங்கி வருவதாக 'சங்க இலக்கியங்களில் வரைவுகடாதலும் அறத்தொடு நிற்றலும்' என்ற நூலில் கூறுகிறார்.

கற்பு என்ற சொல்லிற்கு திருமணத்திற்கு பின்பு தலைவனும் தலைவியும் ஒருவர் மீது ஒருவர் அன்பு கொண்டு அவ்வாழ்வில் ஏற்படும் துன்பங்களின் போது தலைவி ஆற்றியிருந்தும் பிரிவின் போது தலைவி ஆற்றியிருப்பதனையும் விட்டுக்கொடுத்து செல்லும் மனப்பான்மையினையும் பற்றி தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடுவதனை சங்க அகப்பாடல்கள் மூலம் தெளிவாக அறியலாம்.

**இலக்கண நூல்களில் கற்பு:**

தலைவன், தலைவியின் களவு வாழ்க்கையில் ஒரே வழி பொய்யும் வழுவும் புகுவதற்கு வாய்ப்பு இருந்ததனால்தான் சமுதாயச் சான்றோர் கரணம் என்ற பெயரால் திருமணச் சடங்குகளை வகுத்தனர்.

"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் காரணம் என்ப" (தொல். பொருள். சூ. 4)

என்னும் நூற்பாவால் தொல்காப்பியர் நெறிப்படுத்தியதைக் காணலாம்.

கற்பு என்பதற்கு இலக்கணம் கூறும்போது கற்பெனப்படுவது கரணத்தொடு பொருந்திக் கொள்ளுதற்குரிய மரபினை உடைய கிழவன் கொள்ளுதற்குரிய மரபினை உடைய கிழத்தியைக் கொடுப்பதற்குரிய மரபினை உடையார் கொடுப்பக் கொள்வது என்று தொல்காப்பியர் கூறுவது கருதத்தக்கது.

"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே" (தொல்.பொருள்.சூ.1)

என்ற நூற்பாவால் இதனை உணரலாம் இதிலிருந்து களவு மணமாயினும் கற்புவழி மணமாயினும் கரணத்துடன் நடைபெறல் வேண்டும் என்பதைத் தொல்காப்பியம் வற்புறுத்துகிறது.

தொல்காப்பியம் தோன்றி பல நூற்றாண்டுகளுக்கு பின்பு தோன்றிய இறையனார் அகப்பொருள் கற்பென்பதற்கு களவின் வழியே கற்பு நிகழும் என்றும் கற்பினுள் பிரிவு எனினும் பூப்பு எனினும் ஒக்கும் என்று குறிப்பிடுவதனை

" முற்படக் புணராத சொல்லின் மையற்

கற்பெனப் படுவது களவின் வழித்தே" (இறையனாரகப்பொருள் சூ.99)

என்ற நூற்பாவால் அறியமுடிகிறது. தொல்காப்பியம், இறையனாரகப்பொருள் இலக்கணமரபுகளைப் பின்பற்றி எழுதிய நம்பியகப்பொருள் கற்பென்பதற்கு இலக்கணம் கூறும் போது கற்பில் மகிழ்ச்சி, ஊடல், ஊடலுணர்த்தல், பிரிவு போன்றவை உடையதே கற்பு என்று கூறுவார். இதனை

"பொற்பமை சிறப்பிற் கற்பெனப் படுவது

மகிழ்வும் ஊடலும் ஊடலுணர்த்தலும்

பிரிவும் பிறவும் மருவிய தாகும்" (அகப்பொருள்விளக்கம் சூ.246)

என்ற நூற்பாவினால் களவு வாழ்க்கை முடிந்து திருமணம் செய்து கொண்ட தலைவன் தலைவினது மனைவாழ்வும் அவ்வாழ்வில் தலைவன் தொழில் காரணமாக பிரிந்து செல்லும் போது ஆற்றியிருத்தலும் பரத்தையிற் காரணமாக பிரிந்து சென்ற தலைமகன் மேல் தலைவி ஊடல் கொள்ளுதலும் அவ்வூடல் தீர்க்க வாயில்கள் உதவுவதைப் பற்றியும் கூறுவதே கற்பென்று கூறுகின்றார்.

**ஐந்திணைகளில் கற்பு:**

மகளிர் தம் கற்பிற்கு அடையாளமாக முல்லை மலரைக் கூந்தலில் சூடுவர். இம்முல்லை மலரைப் பார்த்தால் பிரிந்து இருக்கும் தலைவனுக்கும் தலைவிக்கும் தம்மை எள்ளி நகையாடுவது போலவே தோன்றும். வினைமுற்றி மீளும் முல்லை தலைவனுக்கும் இவ்வாறே தோன்றுகிறது.

இயல்பாகவே மாலையில் அரும்பும் முல்லையைக் கண்ட தலைவன் தன்னைப் பேணும் மகளிர்க்கு ஆதரவாக இல்லாமல் எள்ளி நகையாடுகிறாய், இவ்வாறு துணையைப் பிரிந்து இருக்கும் என்னை நகைப்பது தகுமோ என்கிறான் என்ற செய்தி குறுந்தொகையில் உள்ளது.

தலைவன் விழாக்கோலம் பூண்டு ஒழுகக் காரணமாய் இருப்பவள் தலைவி. ஆனால் தலைவன் அவளை மகிழ்வித்து மகிழாது அவள் உள்ளம் வருந்துமாறு அவளைப் பிரிந்து பரத்தையரை மகிழ்வித்துக்கூடி அவர்கள் நிகழ்த்திய அடையாளங்களுடன் தன் மனைக்குத் திரும்பினான். தலைவனின் இப்புற ஒழுக்கத்தைப் பிறர் அறியாது மறைத்த தலைவி தலைவனே தன் செயலுக்கு நாணமடையுமாறு அவனை விரைந்து எதிர்கொண்டு வரவேற்கிறாள். பாலைநிலத்தில் தலைவன் தலைவியுடன் தோளைப் பிரியாது வாழ்க்கை நடத்துகிறான். அப்போது பொருள் தேட நினைக்கிறான். ஆனால் தலைவியை விட்டு பிரிந்து செல்ல முடியாமல் வருந்துகிறான்.

**மக்கட்பேறு – கற்பு**

களவுக் காலத்திலேயே அச்சம், நாணம், கற்பு போன்ற மனக்கூறுகள் பெண்ணிற்குக் கற்பிக்கப்பட்டு பயிற்சியாக்கப்பட்டிருக்கிறது. தலைவனும் தலைவியும் இப்படித்தான் இருக்க வேண்டுமென்று கற்பித்தார்கள். ஆதிகாலத்தில் மனிதனின் முதல் சொத்து ஆநிரைகள். ஆநிரைகளால்தான் தனியுடைமை உருவானது. சொத்தை விட்டுச் செல்ல வாரிசுரிமை தோன்றியது. இந்தக் குழந்தை என் வாரிசுதான் என்பதை நிலைநாட்டப் பெண்ணிற்குக் கற்பு விதிகள் உருவாக்கப்பட்டன.

"மாசில் கற்பின் புதல்வன் தாய்

கடவுள் கற்பொடு குடிக்கு விளக்காகிய" (அகநா. 6.13)

என்று வாரிசு உருவாக்கத்தோடு அதுவும் புதல்வனைப் பெற்றெடுத்தல் என்பதோடு கற்பு இணைக்கப்படுகிறது. போருக்குச் செல்பவன் மகன். பொருள் தேடச் செல்பவன் மகன். வேளாண்மை முதலான தொழில்களின் நாயகன் மகன். அந்த மகனை வாரிசாக நம்பிக்கைக்கு உரியவனாக ஈன்றெடுத்துத் தகப்பனுக்குக் கொடுக்கும் மூலதனம் பெண். மொத்தத்தில் சமூகப் பொருளாதார நடவடிக்கைகளுக்குத் தலைமை ஏற்க ஆண்வாரிசைப் பெற்றுத் தரும் ஒரு கருவியாகப் பெண்ணை உருவாக்கும் பயிற்சியே கற்பு.

**சிலப்பதிகாரத்தில் கற்பு:**

சிலப்பதிகாரத்து முதன்மை நோக்கங்கள் மூன்றனுள் கற்பும் ஒன்றாகும். இதனை

"அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவதும்

உரைசால் பத்தினிக் குயந்தோர் ஏற்றலும்

ஊழ்வினை உருத்து வந்தூட்டுமென்பதும்"

என்று குறிப்பிடுகின்றது. அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாக மாறுவதையும் ஊழின் வலிமையும் மையுறுத்திப் பாடியிருந்தாலும் இவற்றையும் மீறிக் கற்புநிலை சிறப்பதை உணர இயலும். கண்ணகிக்கு தீக்கடவுள் ஏவல் கேட்டல் கண்ணகி வானுலகம் செல்லுதல், கணணகிக்கு வழிபாடு நிகழ்த்துதல் எனக் காப்பியத்தின் பெரும்பகுதி கற்பு நிலையைச் சிறப்பித்துப் பேசக் காணலாம் கற்புக்கடன் பூண்டார் கணவனன்றிப் பிறதெய்வம் வணங்கார் என்பதைச் சிலப்பதிகாரம் கூறுகிறது.

கணவனைப் பிரிந்திருக்கும் கண்ணகியை அணுகி தேவந்தி முற்பிறவியில் நின் கணவன் பொருட்டுக் காக்க வேண்டிய ஒரு நோன்பு தப்பினாய். அதனால் உண்டான தீங்கு கெடுவதாக காவிரிச் சங்கமுத்து அயலதாகிய காணரிடத்தே உள்ள சோமகுண்டம், சூரிய குண்டம் எனும் பொங்கைகளும் மூழ்கி காமவேள் கோட்டம் சென்று வணங்கின் தம் கணவரைப் பிரியாது கூடி இன்புறுவர். கணவனோடு மேலுலகில் கூடுவர், யாம் ஒரு நான் ஆடுதும் என்று கூறுகின்றாள். ஆயினும் கண்ணகிழ அவ்வாறு தெய்வம் தொழுதல் பீடன்று என்னு மறுத்து உரைக்கின்றாள். பீடன்று என மறுத்துரைக்கும் கண்ணகியின் கூற்று கற்புடை மகளிர் தெய்வம் தொழுவதால் பெரும் பயன் கிடைப்பதாயினும் கணவனன்றிப் பிற தெய்வங்களைத் தொழார் என்பதை விளக்குகின்றது.

**திருக்குறளில் கற்பு:**

இல்வாழ்க்கைக்கு ஏற்ற நற்பண்பு உடையவளாகித் தன் கணவனுடைய பொருள் வளத்துக்குத் தக்க வாழ்க்கை நடத்துகிறவளே வாழ்க்கைத்துணை ஆவாள். இல்வாழ்க்கைக்குத் தக்க நற்பண்பு மனைவியிடம் இல்லையானால் ஒருவனுடைய வாழ்க்கை வேறு எவ்வளவு சிறப்புடையதாயினும் பயன் இல்லை. மனைவி நற்பண்பு உடையவளானால் வாழ்க்கையில் இல்லாதது என்ன? அவள் நற்பண்பு இல்லாதவளானால் வாழ்க்கையில் இருப்பது என்ன ஒன்றுமில்லை. இல்வாழ்க்கையில் கற்பு என்னும் உறுதிநிலை இருக்கப்பெற்றால் பெண்ணைவிடப் பெருமை இவ்வுலகத்தில் என்ன இருக்கிறது.

“தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைச்சான்ற

சொற்காத்துச் சோர்விலாள் பெண்” -(குறள்: 56)

பெண்ணானவள் தன்னைக் கற்பு நெறியில் காக்கவேண்டும். கணவனோடு வாழ்கின்றபோது நாடி வந்தவர்களுக்கு உணவிட்டு உபசரிக்க வேண்டும். ஒழுக்கத்தில் சிறந்தவளாக இருக்க வேண்டும். குடும்பத்திற்கு பழிச்சொல் இல்லாமல் பார்க்கவேண்டும். அப்படியே பொய்யானப் பழிச்சொல் இல்லாமல் காக்க வேண்டும் என்றார் வள்ளுவர். கண்ணகி கோவலன் தன்னை விட்டுப்பிரிந்தாலும் கற்புநெறியில் தன்னைக் காக்கிறாள். எல்லா செல்வங்களையும் இழந்த பின்னும் கோவலனை அனுசரிக்கிறாள். கணவனைக் கள்வன் என்று கொன்றதனால் மற்றொரு காற்சிலம்பை எடுத்துக்கொண்டு மதுரை மாநகரம் சென்று நீதியை நிலை நாட்டினாள். மாதவி தன்னைக்கற்பு நெறியில் காத்தாள். கணிகையர் குலத்தில் பிறந்தவளை பழிச்சொல் கூறினாலும் கற்புடையப் பெண்ணாக விளங்கினாள். மணிமேகலை தன்னைக் கற்பு நெறியில் காத்தாள். வேசி குலத்திலே பிறந்தவள் என்று ஊர் தூற்றுவதற்கு இடம் கொடுக்காமல் துறவியாக வாழ்ந்து பசித்தவர்களுக்கெல்லாம் உணவு கொடுத்தாள். இராமனை விட்டுப் இராவணன் கடத்தி சென்ற போதும் தன்னைக் கற்பு நெறியில் காத்தாள் சீதை. தனக்கு பழிச்சொல் வந்தபோது தீயில் ஏறி குடும்பத்திற்கு வரும் பழிச்சொல்லைக் காத்தாள். இளங்கோவடிகளாக இருந்தாலும் சீத்தலைச் சாத்தனராக இருந்தாலும், கம்பராக இருந்தாலும் பெண் என்கின்ற கதாப்பாத்திரம் படைக்கும்போது சிறந்த கற்பு நெறியில் படைத்து உலகத்திற்கு பெண்ணின் பெருமையை நிலைநாட்டி உள்ளனர். வள்ளுவர் கருத்தை காப்பியங்களில் பொருத்திப் பார்க்கும்பொழுது கற்பின் வலிமையைப் புரிந்துகொள்ளலாம்.

**முடிவுரை:**

கற்பு என்பது கரணமொடு புணர்ந்த வதுவையாகும். உடலோடு இயைந்த ஒழுக்கமாகும். கடவுளோடு இணைத்து கருதப்படுகின்ற புனிதமாகும். முல்லையோடு முகிழ்த்த முறைமையாகும். இருத்தலுக்காக உருவான இலக்கணமாகும்.

‘கற்பு என்ற நிலை வந்தால் இரு கட்சிக்கும்

பொதுவில் வைப்போம்” என்றார் பாரதி.

பெண்ணுக்கு மட்டுமல்லாமல் ஆணுக்கும் கற்பு உண்டு. கற்பு ஆண், பெண் சமமான ஒன்று. சமத்துவத்தை போதித்தவர்கள் தொடர்ந்து கற்பு நெறியை இருவருக்கும் பொதுவாக கற்பித்துக்கொண்டே இருக்க வேண்டும்.

# காவியத்தலைவி காந்தருவதத்தை

***முனைவர் ம.உமாமகேஸ்வரி,** விரிவுரையாளர், தமிழ்த்துறை, அரசினர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), கும்பகோணம்.

ஐம்பெருங்காப்பியங்களில் தனி சிறப்பு வாய்ந்தது சீவகசிந்தாமணி. தமிழ்த் தாயின் அணிகலனாக திகழ்வது. திருத்தக்கதேவரால் இயற்றப்பெற்றது. காந்தருவதத்தை குணமாலை, பதுமை, கேமசரி, கனகமாலை, விமலை, சுரமஞ்சரி, இலக்கணை என்ற எட்டு மகளிரை சீவகன் மணப்பதாக இக்காப்பியம் நடைபயில்கிறது. ஆதலால் மணநூல் என புகழ்ப்படுகிறது. ஆட்சியால் மண்மகளையும், வீடுபேற்றால் முத்தி மகளையும், கல்வியால் கலைமகளையும், செல்வத்தால் அலை மகளையும் மணப்பதாகச் சுட்டுகிறது இக்காப்பியம். வடமொழியில் உள்ள ஷத்திர சூடாமணி, கத்திய சிந்தாமணி, ஸ்ரீபுராணம் முதலிய நூல்களில் உள்ள கதையைத் தழுவி இயற்றப்பட்டது. விருத்தப்பாவால் இயற்றப்பட்ட முதல் காப்பியம் இதுவாகும். இதில் பதிமூன்று இலம்பகங்களும், மூவாயிரத்து நூற்று நாற்பத்தைந்து செய்யுள்களும் இடம் பெற்றுள்ளன. அறம், பொருள், இன்பம், வீடுபேறு ஆகிய நால்வகை உறுதிப் பொருள்களையும் உரைப்பதால் அடியார்க்கு நல்லார் இதனை முடிபொருள் தொடர்நிலைச் செய்யுள் எனப் போற்றினார். ஜி.யு.போப் அவர்கள் இந்நூலைத் "தமிழிலக்கிய ஒடிசி" எனப் பாராட்டினார்.

### காப்பியப்போக்கு

ஏமாங்கத நாட்டு மன்னன் சச்சந்தன் தன் அரசை அமைச்சன் கட்டியங்காரனிடம் ஒப்படைத்து விட்டு சிற்றின்பத்தில் மூழ்கியிருந்தான். கட்டியங்காரன் மன்னனை சூழ்ச்சியால் கொன்று அரசனான். சச்சந்தன் மனைவி சுடுகாட்டில் சீவகனைப் பெற்றெடுத்தால் பின் சீவகன் வீரம், கலை ஆகிய அனைத்திலும் சிறந்தவனானதும், தன் பெற்றோரின் நிலை அறிந்து தந்தை இழந்த ஆட்சியை மீட்டு எடுத்தான். கட்டியங்காரனை போரில் வென்று அரசனாக முடி சூடினான். மன்னனான சீவகன் தான் மணந்த எண்மரை விடுத்து இல்லறம் துறந்து துறவறம் மேற்கொண்டான். இதில் எண் வகை மகளிர் சுட்டப்பட்டாலும் அவர்களுள் முதன்மையாக விளங்குபவள் காந்தருவதத்தையே ஆகும்.

### வித்தியாதர மங்கை

வெள்ளி மலையில் உள்ள வித்தியாதர மன்னன் கலுழவேகனுக்கும் அவன் தேவி தரணிக்கும் பிறந்தவள் காந்தருவதத்தை. இவள் பிறந்தபோதே சோதிடன் மண்ணில் இராசமாபுரத்தே திருமணம் நடக்கும் என்றான். தத்தை மணப்பருவம் உற்றாள். இராசமாபுரத்தில் இருந்து வந்த ஸ்ரீ தத்தன் என்ற வணிகன் புயலால் கப்பல் அழிந்து கடலில் நீந்தி கரையை அடைந்த போது வித்தியாதரன் அவனைக் காப்பாற்றி கலுழவேகனிடம் அழைத்துச் சென்றான். கலுழவேகன் ஸ்ரீதத்தனிடம் காந்தருவதத்தையை ஒப்படைத்தது "இவள் நின்மகள் வீணை இசைக்கும் குணத்தாலும், வனப்பாலும் ஒப்பற்று விளங்குபவள் இவளை நின் ஊருக்கு அழைத்துச் சென்று இன்னிசையால் இவளோடு போட்டியிட்டு வெல்பவன் யாவராயினும் அவனுக்கு இவளைத் திருமணம் செய்து தருக" என்று கூறினான் காந்தருவதத்தை வித்தியாதர உலகிலிருந்து மண்ணுலகத்திற்கு அழைத்து வந்தான்.

### அழகின் மறுவடிவம்

காந்தருவதத்தை அழகே உருவெடுத்தாற்போல் தோன்றியவள். அவள் இந்திரவில்லையொத்த புருவத்தை உடையவள். ஆம்பல் ஒத்த செவ்வாயினள். வேல்களைப் போன்ற கண்ணினாள் கயல்களை ஒத்த கண்களுடையவள் என்று பலவாறாக தத்தையின் அழகை சிறப்பிக்கிறார் திருத்தக்க தேவர்

**“எரிமணிப் பளிங்கு மாடத் தொழுந்தோர் காமவல்லி**

**அருமணிக் கொடி கொள்மின் கோலமரா் கோனெழுதி வைத்த**

**ஒருமணி குயின்ற பாவையொன்று கொலன்று நாய்கன்**

**திருமணிக் கொடி” (சீ.சி 549)**

என்று போற்றத்தக்க அளவு பேரழகு வாய்ந்தவள்.

**யாழின் பிறப்பிடம்**

தத்தை யாழ் வாசிப்பதில் மிகச் சிறந்தவள். இசையின் பிறப்பிடம் இவளே எனக் கூறும் அளவிற்கு திறமுடையவள். இவள் யாழ் வாசிக்க உட்கார்ந்த போது, வானில் விச்சாதரரும், மண்ணில் உள்ளோரும் எள்விழ இடமின்றி நெருங்கினர்.

**“கண்ணினோடு பிறந்தது காரிகை**

**வண்ணங் காண்டற் கன்றோ?”**

என்று புகழ்ந்தனர். காந்தருவதத்தை கலைகள் பல பயின்றவள். சீவகனின் கலைத்திறம் உலகிற்கு உணர்த்த வாய்ப்பு அளித்தவள். சிறப்பாக யாழிசையில் தேர்ந்தவள்.

**“முற்றவ முடையவளாகி மூரிநிற் கலைகள் அல்லாம்**

**கற்றவள் கணங்கொள்னல்யாழ் அனங்கனை களிக்கும் நீராள்” (சீ.சி 607)**

என்று அவளுடைய யாழிசைத் திறம் உணர்த்தப்படுகிறது.

யாழ் மண்டபத்தில் காந்தருவதத்தை இமையவர் மடமகன் போல வீற்றிருந்தாள். யாழை எடுத்துப் பண்ணை எழுப்பி நரம்பைத் தெறித்தாள் காந்தருவதத்தை பாட, யாழ் போரில் கலந்து கொள்ளும் வீரர்கள் யாழின் கூறுப்பாட்டை வாசிக்க வேண்டும். இல்லையெனில் தத்தையின் யாழ் வாசிப்பினைப் போல் விரைந்து பாட வேண்டும். தத்தை யாழை வாசிக்க ஆரம்பித்தாள்.

**“கருங்கொடிப் புருவ மேறா கயனெடுங் கண்ணு மாடா**

**வருங்கடி மிடறும் விம்மா தணிமணி**

**இருங்கடற் பவளச் செவ்வாய் திறந்தவள் பாடினர்களோ**

**நரம்பொடு வீணை நாவினவின்றதோ வென்று நயிந்தார்” (சீ.சி 658)**

என்று வியந்து நின்றனர். வீணைப்போரில் மேல் உலகத்தவரும், அந்தணரும், வணிகரும் கலந்து கொண்டனர், ஆயின் எவரும் வென்றார் இல்லை. இவ்வாறு “ஆறு நாட்கள் சென்றன. இதைக் கேள்வியுற்ற சீவகன் அவளோடு போட்டியிட முடிவு செய்தான். கந்துக் கடனின் இசைவு பெற்று, தோழர்கள் சூழ, சிவனால் எரியுண்ட காமன், மீண்டும் மண்ணுலகில்தோன்றினாற் போல, எழிலுடன் யாழ் மேடைக்கு வந்தான்அவனைக் கண்ட மகளிர்,

**“தோற்றனள் மடந்தை நல்யாழ் தோன்றலுக்கென்று நிற்பார்**

**நோற்றனள் நங்கை மைந்த னிளநல னுகர்தற் கென்பார்”?** (சீவக : 792)

என்று கூறி மகிழ்ந்தனர். காந்தருவத்தையோ, நீர் தேவராயினும், மனிதராயினும் என்மன அடக்கமென்னும் கதவைத் திறந்த, காவல்மிக்க நெஞ்சமென்னும் கன்னி மாடத்தில் புகுந்து, உள்ளம் வருந்தக் கட்டி விட்டீர். யான் என் “இயல்பாலும், மாலையாலும் உம்மைப் பிணித்துத் தேவரைப் போல இமையா நாட்டத்துடன், என்னைக் காணச் செய்கிறேன்”?” என நினைத்தாள்.

**“யாவனே யாயினும் ஆக வருநிறைக்க தவம் நீக்கிக்**

**காவலென் நெஞ்சம் என்னும் கன்னிமா டம்பு குந்து**

**நோவ என் உள்ளம் யாத்தாய் நின்னையு மாலை யாலே**

**தேவரின் செறிய யாப்பன் சிறிதிடைப் படுக“.** (சீவக : 714)

என்றாள. இப்பாடலின் மூலம் தத்தையின் உள்ளத்தைச் சிவகனைத் தவிர வேறெந்த ஆணும் கவர்ந்ததில்லை என்பதை அறிய முடிகிறது.

காந்தருவதத்தையின் ஆணையின்படி விணாதிபதீ உறையிலிடப்பட்ட உயர்ந்த வீணை ஒன்றினை மட்டும் நீக்கி வைத்து, வேறு பல வீணைகளைச் சீவகனுக்குத்தந்தாள். சீவகன் யாழின் நரம்புகளைத் தெறித்தான். வீணைகளின் குறைபாடுகளை வீணாபதிக்குக் கூறினான்.

"இந்த யாழின் மரம் நீரில் நின்று மெலிவடைந்தது. இது வேண்டாம். இவ்வீணையின் மரம் அழுகியது ஆதலின் இது வேண்டாம் இம்மரம் புண்ணுற்றதனால் இந்த யாழும் செல்வதாக இந்த மரம் இடியேறு உண்டது. ஆதலின் இந்த யாழ் ஒழிவதாக இம்மரம் கணிகையின் மகன் போலச் சிறப்பின்று. ஆதலால் இந்த யாழும் நீங்குவதாக. இம்மரம் காமத்தீயால் வெந்தவர் போல் முல்லை நிலத்தில் உழவரால் சுடப்பட்டு வெந்ததாகலின் இந்த யாழும் போவதாக இம்மரம் களிற்றால் முறிக்கப்பட்டது. ஆதலின், இந்த யாழும் வேண்டாம்" என்று யாழ்களின் குறைகளைக் கூறி அவற்றைப் போக்கினான். முடிவில் வீணாபதி நல்யாழினைக் கொடுத்தாள். சீவகன் அதை வாங்கி ஆராய்ந்து, "காந்தருவதத்தையின் நலம் போல இது உயர்ந்தது" என்றான். மண்மகள் ஈன்ற இம்மரம் ஆகாயமாகிய செவிலித்தாயின் மழையாகிய இனிய பாலை உண்டு, நோய் நீங்கி வளர்ந்து வாளினால் வெட்டப்பட்டது என்றான். (719-720) அந்த யாழ் நரம்பின் தீமையை நெடும்பொழுது ஆராய்ந்து, காந்தரு வதத்தை காணும்படி நரம்பின் முறுக்கை உடைத்து அதில் கிடந்த மயிரைக் காட்டினான். வேறு நல்ல

நரம்பு வாங்கி செம்பாலைப் பண்ணை இசைத்தான். காதலால் மயங்கிய காந்தருவதத்தையின் உள்ளம் அவனை வெல்ல முடியாது என நினைத்தது. அவள் தன் அழகிய நுதல் வியர்க்க, மாமதுர கீதத்தைப் பாடினாள், அவள் பாடிய பாட்டும்அதற்கேற்ற யாழும் ஒரு திறமாய் இருந்தன. சீவகன் பாடிய பாட்டும் யாழும் வேறொரு திறமாய் இருந்தன. அவள் மெல்விரல் யாழ் நரம்பின் மீது செல்லவில்லை. யாழை விடுத்துக் கண்டத்தால் பாடினாள். அவள்மிடறு நடுங்கினாள். இதனால் அவள் தன்போட்டிக்குரிய இசையில் தோல்வியுற்றாள். தோற்ற அவள் காதலில் வென்றாள். சீவகனின் கழுத்தில் மாலையை இட்டாள் ஏற்கெனவே சீவகன் மீது பொறாமையும் பகைமையும் கொண்ட கட்டியங்காரன், உள்ளம் புழுங்கினான். கள்ளரைப் புலியின்மீது ஏவி விட்டு வழிப் போக்கன் தப்பித்துக் கொள்வதைப் போல, ஏனைய மன்னர்களைத் தாண்டி விட்டுச் சீவகன் மீது போர்தொடுக்கச் செய்தான். மன்னர்கள் சீவகனிடம் போரிட்டுத் தோற்றோடினர். வெற்றி வீரனாகிய சீவகன், காந்தருவதத்தையைத் தன் இல்லத்திற்கு அழைத்துச் சென்று, பெற்றோர் உடன்பாட்டுடன்மணந்தான்.

**தெய்வக் கொடியனையாள்**

காந்தருவதத்தை வித்தியாதர உலகைச் சார்ந்தவளாதலால் தெய்வீக ஆற்றல் பெற்றவளாகத் திகழ்ந்தாள். கட்டியங்காரன் மத யானையை அடக்கிய சீவகனைக் கைது செய்ததை அறிந்த காந்தருவதத்தை தன் கணவனைக் காக்க வேண்டித் தியானம் செய்தாள். மந்திரங்களை ஓதின அளவில் அவள் வழிபாட்டிற்கு விரும்பி வரும் தெய்வங்கள் வாள், வேல் முதலியவற்றை மிகுதியாக ஏந்தி வந்தனர். அதற்குப் பிறகு அவள் தன்னிலை உணர்ந்தாள். தான் சிறையை நீக்கினால்தன்கணவனின் ஆற்றலும் கல்வியும் என்னாகும் எனக் கவன்றாள்.

சுதஞ்சனனால் காப்பாற்றப்பட்ட சீவகன் கனகமாலையை மணம் புரிந்து வாழ்ந்து கொண்டிருந்தான். வாசவதத்தை வித்தை மகிமையால் சீவகன் ஏமமாபுரத்-தில் கனக மாலையோடிருத்தலைக் கண்டு ஏங்கினாள். சீவகனைக் காணாத நந்தட்டன் காந்தருவதத்தையை வணங்கி, தான் சீவகனை அடையும் படியாகச் செய்ய வேண்டும் என வேண்ட, அவள் ஆகாச காமினி என்னும் மந்திரத்தை ஓதினாள். நந்தட்டனைச் சீவகனிருக்கும் இடத்திற்கு அடையச் செய்தாள். காந்தருவதத்தை, பிறந்த குடியால் தெய்வ ஆற்றல் வாய்ந்தவளாயினும் புகுந்த குடிக்கேற்ப மண்ணக மகளிரின் பண்பு நலன் வாய்ந்தவளாகத் திகழ்ந்தாள்.

சிவகன் பூமகளை வென்ற பிறகு அவன் தன் மனைவியை அழைத்து இல்லறம் என்னும் நல்லறம் ஏற்றான். காந்தருவதத்தையில் வயிற்றில் தோன்றிய மகனுக்குத் தன் தந்தையின் பெயராகிய "சச்சந்தன்" என்னும் பெயரிட்டு, அழைத்தனர். சீவகன் தவம் மேற்கொண்ட போது அவளுடைய மகனே நாட்டின் அரசனானான். காந்தருவதத்தை விசயையின் பள்ளியைச் சார்ந்து தவம்மேற்கொண்டாள். மறுமையில் இந்திரப்பதவி அடைந்து இன்புற்றாள்.

காந்தருவதத்தை, வித்தியாதர அரசனின் மகளாகத் தோன்றினாள். பேரழகியாக வளர்ந்தாள். கலையரசியாகத் திகழ்ந்தாள். பேரரசனின் மனைவியாக வாழ்ந்தாள். நாட்டு மன்னனின் தாயாகும் பேறு பெற்றாள். சமண சமயத் துறவியாகி, பேரின்பம் கண்டாள். இவள் ஒரு சிறந்த காவியத் தலைவியாக ஏற்றம் பெற்றாள்.

# சங்ககாலப் பெண்புலவர்கள் பாடல்களில் தலைவியின் அகவாழ்வு

*முனைவர் ஐ.வள்ளி, உதவிப்பேராசிரியர், சி.டி.டி.இ. மகளிர் கல்லூரி, சென்னை- 11

சங்ககால இலக்கியங்கள், பழந்தமிழர் வாழ்வைப் பறைசாற்றும் வரலாற்றுப் பெட்டகமாகும். சங்கப்பாடல்களில், மக்களின் காதல், வீரம் போற்றியுரைக்கப்பட்டுள்ளது. அக்காலத்தில் ஆண்களுக்கு இணையாகப் பெண்களும் கல்வி கற்றுப் புலமை மிக்கவர்களாகத் திகழ்ந்தனர். சங்காலத்தில் இருந்தப் பெண் புலவர்களின் எண்ணிக்கை குறித்து சில கருத்து வேறுபாடுகள் உள்ளன. “உ.வே.சா. 38 எனவும் எஸ்.வையாபுரிப்பிள்ளை 30 எனவும் ஔவை துரைசாமிப் பிள்ளை 34 எனவும் புலவர் கா. கோவிந்தன் 27 எனவும் ஔவை நடராசன் 41 எனவும் ந.சஞ்சீவி 30 எனவும் தாயம்மாள் அறவாணன் 45 எனவும் குறிப்பிடுகின்றனர்”. (சங்கப் பெண் கவிஞர்களின் கவிதைகள், முனைவர். ந. முருகேசப்பாண்டியன், ப-6). இக்கட்டுரையில் பெண் புலவர்கள் பாடல்களில் தலைவியின் அகவாழ்வு எவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளன என்பது ஆராயப்படுகிறது.

தலைவியின் தலையாயத் தொழில்: தலைவன் தலைவி இணைவு களவு கற்பு என இரு நிலைகளில் அமைகிறது. அக்காலச் சமுதாயத்தில் ஆண் பெண் பணிப்பகிர்வு காணப்பட்டதை, ‘வினையே ஆடவர்க்குயிர்’ ‘மனையுறைதல் மகளிர்க்கு அணிகலன்’ என்பனப் போன்ற சங்கப்பாடல்கள் வழி அறியலாம். இக்கற்பிதம் வழிவழியாகக் கூறப்பட்டு இல்லற வாழ்விற்கேற்ப பெண்ணும் சமுகவாழ்விற்கேற்ப ஆணும் பழக்கப்படுத்தப்பட்டனர். இதன் விளைவு தொழில், பொருளாதாரம், வீரம் சார்ந்த பணிகள் புரிய, சமுகவெளியில் இயங்க, ஆண்களுக்கு வாய்ப்பு அதிகமாகவும், மனை மேம்படுப் பணிகளுக்கான இயங்குதளமான வீடு பெண்களுக்கான இடமாகவும் மாறியது. இத்தளத்திலேயே, பெண்கள் இயக்கம் இருந்ததால் பெண் அனைத்து நிலையிலும் ஆணைச் சார்ந்தவளாகவே வாழ்கிறாள். தலைவன் பொருளீட்ட, போர் புரிய, பிறவினை மேற்கொள்ள எனப் பெரும்பாலும் தலைவியைப் பிரிந்துப் பயணங்கள் மேற்கொள்கின்றான். இச்சூழலில், தலைவனே உலகம் என வாழும் தலைவி அவனைப் பிரிந்து வாழும் நிலைக்கு ஆளாகிறாள்.

.......................................................................காதலர்
ஒருநாள் கழியினும் உயிர்வேறு படுஉம்
பொம்மல் ஓதி? (நற்றிணை-129)

இப்பாடலில் தலைவனை ஒருநாள் பிரிந்தாலும் உயிர் பிரிவது போல், துயரத்தில் ஆழும் தலைவியின் இயல்பினைக் கூறுகிறார் ஔவையார். மேலும் அப்பாடலில்,

தம் வினை முற்றி வருஉம் வரை,
நம்மனை வாழ்தும் என்ப, நாமே,

தலைவன் வரும்வரை துயரைத் தாங்கிக்கொண்டு வாழ்வதைத் தவிர நமக்கு வேறு வழியில்லை. இதுவே நம்மைச் சுற்றியுள்ளவரின் எதிர்பார்ப்பாக உள்ளது எனக் கூறித் தோழி தலைவியைச் சமாதானப்படுத்துகிறாள். இதைப் போலவே,

இளமை பாரார் வளம்நசைஇச் சென்றோர்

இவணும் வாரார்; எவண ரோ? (கு.தொ-126)

எயிறுஎன முகையும் நாடற்குத்

துயில்துறந் தனவால் தோழி! எம்கண்ணே. (கு.தொ-186)

எனத் தலைவியின் நலத்தினைப் பற்றிக் கவலைப்படாமல், வினையின் பொருட்டுச் சென்ற தலைவனையும் அவன் பிரிவால் தூக்கம் தொலைத்தத் தலைவியையும் ஒக்கூர் மாசாத்தியார் காட்சிப்படுத்துகின்றார். கழார்க்கீரன் எயிற்றியார்,

நள்ளென் யாமத்து, 'ஐ' எனக் கரையும்

அஞ்சுவரு பொழுதி நானும், எங்கண்

துஞ்சா வழிதோழி! (கு.தொ-261)

மேற்கண்ட பாடலில், இரவுக் காவலரின் உறங்காதக் கண்கள் போல என் கண்களும் உறங்க மறுக்கின்றன என வருந்தும் தலைவியையும்,

குன்று நெகிழ்ப்பன்ன குளிர்கொள் வாடை!

எனக்கே வந்தனை போறி! புனற்கால்

அயிர்இடு குப்பையின் நெஞ்சுநெகிழ்ந்து அவிழ,

கொடியோர் சென்ற தேயத்து, மடியாது

இனையை ஆகிச் செல்மதி:

வினைவிதுப் புறுநர் உள்ளலும் உண்டே! (அகநானூறு-163)

என்று, என்னைத் தாக்கும் வாடையே சற்று என் தலைவன் சென்ற பாதையில் செலவாயாக! ஒரு வேளை நீ சென்றால் தலைவனுக்கு என் நினைவு வந்து என்னைக் காண்பதற்காகத் திரும்பி வரக்கூடும் என அகநானூற்றுத் தலைவி வாடையிடம் மன்றாடும் தலைவியையும் படைத்து, அக்காலத் தலைவின் பரிதாபத்திற்குரிய இல்வாழ்வைப் படம் பிடிக்கிறார். அள்ளூர் நன்முல்லையாரோ, தலைவனின் பிரிவை ஏற்றுக் கொள்ளும்படி தன் மனதை ஆற்றுப்படுத்தும் தலைவியை பின்வரும் பாடலில் காண்பிக்கிறார்.

இனிய செய்தநம் காதலர்

இன்னா செய்தல் நோம், என் நெஞ்சே! (கு.தொ-202)

இவற்றிற்கெல்லாம் ஒருபடி மேலே சென்று ஔவையார்,

முட்டுவேன்கொல்? தாக்கு வேன்கொல்?

ஓரேன், யானும் ஓர்பெற்றி மேலிட்டு,

'ஆ அ ஒல்' எனக் கூவு வேன்கொல்? (கு.தொ-28)

என்று, தனிமைத்துயரில் வருந்தும் தலைவி, தன் துயரைப் பற்றிக் கவலைப் படாத ஊருக்கு என் நிலையை எவ்வாறு கூறுவேன்? முட்டுவேனா? தாக்குவேனா, ஆவெனவும், ஒல்லெனவும் ஒலி உண்டாக உறுதியுடன் குரலெடுத்துக் கூவுவேனா? என்ன செய்வது என அறியேனே? எனப் புலம்பும் தலைவியின் வேதனையையும் ஒரு ஆணைப் பற்றி கவலைப்படும் அளவிற்கு இச்சமுகம் பெண்ணைப் பற்றிக் கண்டுகொள்ளாத நிலையையும்பதிவு செய்கிறார்.

தலைவன் தலைவி இணைந்த இல்வாழ்வில் தலைவன் பிரிவை எண்ணித் துயரப்படுதல், அவன் வருகைக்குக் காத்திருத்தல் ஆகியவற்றிலேயே தலைவி தன் வாழ்வின் பெரும்பகுதியைக் கழிக்கின்றாள் என்பதும் இதுவே தலைவியின் தலையாயத் தொழிலாக அமைந்துவிட்டது என்பதும் உணரமுடிகிறது. மேலும் அவள்

வாழ்வில் மீண்டும் மகிழ்ச்சி எப்போது என்றால் தலைவன் வினை முடிந்து வந்த பிறகு தான்.

தலைவியின் வாழ்க்கைத்துணை நலம்; தனக்கான வாழ்க்கைத் துணை சிறப்பாக அமையவேண்டும் என்ற எதிர்பார்ப்பு ஆணுக்கும் உண்டு பெண்ணுக்கும் உண்டு. ஆண்களுக்கு மனைவி எவ்வாறு அமைந்தால் அவன் வாழ்வு சீர்பெறும் என்பதையே பெரும்பாலும் இலக்கியங்கள் வலியுறுத்திச் சொல்லியிருக்கின்றன.

மனைத்தக்க மாண்புடையவள் ஆகித்தற்கொண்டான்

வளத்தக்காள் வாழ்க்கைத்துணை (கு-51)

துடியாப் பெண்டீர் மடியில் நெருப்பு (கொன்றை வேந்தன்-41)

பழிக்கு அஞ்சாத் தாரத்தின் நன்று தனி (நல்வழி-31)

பெண்களுக்குக் கணவன் எவ்வாறு அமைந்தால் அவள் வாழ்வு நலமாக அமையும் என்ற கற்பிதங்கள் ஆண்களுக்கும், சமுகத்திற்கும் சொல்லப்படவில்லை. பெண்ணின் வாழ்க்கைத் துணைநலம் குறித்து ஏனோ இலக்கியங்களில் இடம்பெறவில்லை. ஆண், பெண் இருபால் புலவர்களும் இதற்கு விதிவிலக்கல்ல. சமுகவாழ்வைப் படம்பிடிப்பவை இலக்கியங்கள் எனில் அக்காலச் சமுகம் பெண்களின் இல்வாழ்க்கை மகிழ்ச்சிக்கு முக்கியத்துவம் தருகின்ற சமுகமாக இல்லை போலும். இருப்பினும் ஒரு சில பாடல்களில் ஆங்காங்கே தொட்டிட்டுச் செல்கின்றனர் சங்கப்பெண்புலவர்கள். அஞ்சியத்தை மகள் நாகையார், தன் பாடலில்..

இன்துணைப் பயிரும் குன்றநாடன்

குடிநன்கு உடையவன்; கூடுநர்ப் பிரியலன்,

கெடுநா மொழியிலன்; அன்பினன் என; நீ’

வல்லகூறி, வாய்வதின் புணர்த்தோய் (அ.நா-352)

நல்லகுடும்பத்தைச் சார்ந்த, தீச்சொற்களைப் பேசாத, அன்பு நிறைந்தவன் எனத் தலைவனின் இயல்பை நீ எடுத்துக் கூறியதால் தான், நான் அவனுடன் இல்வாழ்வில் இணைந்தேன். இப்போது என் வாழ்வு திருமணநாளினும் மகிழ்ச்சித் தரக்கூடியதாக ஒவ்வொரு நாளும் அமைகிறது, உனக்கு மிக்க நன்றி என அகநானூற்றுத் தலைவி தன் தோழிக்கு நன்றி சொல்கிறாள். இவ்வாறு மனம் நிறைந்த வாழ்வு கிட்டியதாகப் பெண்கள் பாடும் பாடல்கள் சங்கப்பாடல்களில் குறைவு. பெரும்பாலானப் பாடல்கள் தலைவியின் பிரிவுத்துயர்ப் பாடல்களாகவே அமைந்திருப்பதைக் காணலாம்.

சங்ககாலம் ஆணின் மேலாண்மை நிறைந்த ஒருகாலம். இக்காலத்தில் தலைவனின் நற்பண்புகளின் அடிப்படையில் தான் குடும்பம், சமுகம் ஆகியவற்றின் நலன் அமையும். அக்காலச் சமுகத்தின் இந்நிலையை துணிவுடன் ஔவை, பின்வரும் பாடலில் எடுத்துரைக்கிறார்.

எவ்வழி நல்லை ஆடவர்,

அவ்வழி நல்லை; வாழிய நிலனே! (புறம்-187)

தலைவனைச் சார்ந்தத் தலைவியின் இல்வாழ்வும், அவனின் நற்பண்பினைப் பொறுத்தே அமைந்துள்ளது. தலைவன் வினை, போர், பரத்தை போன்ற காரணங்களால் தலைவியை நெடுநாள் பிரிந்தே இருப்பதால், பெரும்பாலும் பிரிவுத்துயரிலேயே மூழ்கியிருக்கின்றாள் தலைவி என்பதைச் சங்கப் பெண்புலவர்களின் பெரும்பாடல்கள் உணர்த்துகின்றன.